Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, பருத்தித்துறை.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 24 (12.08.2004) வியாழக்கிழமை இதழ்:314

# புலிகளின் யோசனைப்படியே பேசுங்கள்;
# அரசிடம் சிவில் சமூக அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கை இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வைக் காண்பதற்கு நாட்டிலுள்ள 70 சதவீதமான மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். பத்து சதவீதமானோரே சமஷ்டிக்கு எதிர்புத் தெரிவிக்கின்றனர்.**

**இந்த நிலையில் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாக்க் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலமே சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முடியுமென்று தென்னிலங்கை சிவில் சமூக அமைப்பினர் இலங்கை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம் எடுத்துக்கூறியுள்ளனர்.**

சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை நேற்றுச் சந்தித்துப் பேசிய போதே சிவில் சமூக அமைப்பினர் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் சிவில் சமூக அமைப்பினர் அண்மையில் தாம் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச சந்தித்துக் கலந்துரையாடிய போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து ஜயந்த தனபாலவிடம் எடுத்து விளக்கினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அந்திராக்ஸ் பற்றிய பீதி
# வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது



(கொழும்பு)

கொழும்பு நகரில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் வெள்ளைத்தூள் அடங்கிய கடிதம் கிடைத்ததையடுத்தே அமெரிக்கத் தூதரகம் காலவரையறையின்றி மூடப்பட்டது.

அந்திராக்ஸ் எனச் சந்தேகிக்கப்படும் கிருமி அடங்கிய தூளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி தூதரகம் மூடப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே கொழும்பிலுள்ள ஏனைய வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ் தானிகராலயங்களின் பாதுகாப்பையும் பொலிஸார் அதிகரித்திருக்கின்றனர்.

தூதரகங்களுக்கு வரும் கடிதங்கள், பொதிகள் குறித்து முன்னெச்சரிக்கையுடன் சோதனைகள் இடம்பெற்றுவரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு!

(கொழும்பு)

கொழும்பு நகரில் ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை சோதனையிடும் விசேட நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளது.

அண்மைக்காலமாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களையடுத்து, பொலிஸார் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க அதிகாரிகள் வவுனியாவுக்கு விஜயம்!

(வவுனியா)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கண்ணிவெடி அகற்றும நிபுணர் குழுவினர் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்து, அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டனர்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், வன்னி மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய மற்றும் வவுனியாமாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஆறு கண்ணிவெடி அகற்றும் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அமெரிக்க நிபுணர்கள் பேச்சு நடத்தினர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வெடிபொருட்கள் அகற்றும் பிரிவைச் சேர்ந்த கிட்மனும், கேணல் ஹரிஸ் ஆகியோர் பின்னர் குடா கச்சக்கொடிக்குச் சென்று அங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில்
# புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள புலிகள் - எஸ்.ரி.எவ் இணக்கம்!

(அம்பாறை)

எதிர்காலத்தில் இருதரப்பும் புரிந்துணர்வுடன் நடந்துகொண்டு சமாதானத்துக்கு உழைப்பதென தமிழீழ விடுதலைப்புலிகளும், விசேட அதிரடிப் படையினரும் இணங்கியுள்ளதாக - அக்கரைப்பற்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் என அடையாளம் காட்டப்பட்ட போதும் சாதாரண மக்களை விடவும் மோசமாகத் தமது உறுப்பினாகள் நடத்தப்பட்டமை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டது.

பெண் போராளிகள் பெண் பொலிஸாராலேயே பரிசோதனை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிரானில் நேற்று அதிகாலை இளைஞன் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கிரானில் வசித்துவந்த. கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிரான் பகுதியைச் சேர்ந்த சிவராசா சிவசீலன் (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று இரவு சுமார் 9.30 மணியளவில் சிவசீலனின் வீட்டுக்குச் சென்ற 7 பேரடங்கிய ஆயுதம் தாங்கிய குழுவினர் அவரை வீட்டிலிருந்து அழைத்துச் சென்றனர்.

பின்னர் இவர் வீடு திரும்பாத நிலையில், நேற்று அதிகாலை இரண்டுமணியளவில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் திருமலை வீதியில் சடலமாக காணப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண விஜய அறிக்கை
# ஜனாதிபதி சந்திரிகாவிடம் தனபால இன்று கையளிப்பு

(கொழும்பு)

அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்டிருந்த விஜயம் தொடர்பான அறிக்கையொன்றை, ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜயந்த தனபாலவின் விஜயம் தொடர்பான அறிக்கையொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜயந்த தனபால யாழ்ப்பாணத்தில் கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டுவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை சந்தித்து மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் உள்ள முப்படை அதிகாரிகளையும், யாழப்பாண அரசாங்க அதிபரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் சமாதான செயலகத்துக்கு
# தீர்வையற்ற வாகனங்கள்; ஜே.வி.பி. அரசுமீது அதிருப்தி!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துக்கு தீர்வையற்ற நான்கு வாகனங்களை அரசாங்கம் வழங்கியது தொடர்பாக, ஜே.வி.பி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பதுளையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ச தமது அதிருப்தியை வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்தபோது விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் வழங்கியதும், இப்போதைய அரசாங்கம் தீர்வையற்ற வாகனங்களை வழங்குவதும் சமனான நடவடிக்கைகள் அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி தற்சமயம் பதவியிலிருந்தால் தீர்வையற்ற வாகனங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருக்கும் என்பதுடன், சம்பூருக்கு 95 விடுதலைப் புலிகளைச் செல்வதற்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# குடாநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளை ஜப்பான் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர்

அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் செய்த ஜப்பான் நாட்டின் பசுபிக் ஆசியா ஆராய்ச்சி நிலைய பிரதிநிதிகள் யாழ். குடாநாட்டிலுள்ள சகல கடற்றொழில் கிராமங்களுக்கும் நேரில் விஜயம் செய்து, அங்குள்ள மக்களையும், சங்கங்களினது சமாசப் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களின் குறை கேட்டறிந்தனர்.

இந்தக் குழுவில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சி நிலைய பேராசியர் நக்காமுறா கிசாச்சி, நிறுவன திட்டமுகாமையாளர் இமாநாறி அயாகோ உட்பட மூன்று பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் குழுவினர் சுழிபுரம், காரைநகர், வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, வேலணை, ஊர்காவற்றுறை, வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலி தென்கிழக்கு ஆகிய பிரதேச மட்ட சமாசங்களுக்கு விஜயம் செய்து கடற்றொழிலாளர்களின் தேவைகள், குறைகள், மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்களையும் கேட்டறிந்ததுடன் சமாசங்களினதும், சங்கங்களினதும் கணக்கறிக்கைகளைப் பார்வையிட்டுச் சென்றனர்.

யாழ். குடாநாட்டின் ஜப்பானிய பிரதிநிதிகளின் கடற்றொழில் கிராமங்களுக்கான பிரயாண ஒழுங்குகளை யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர். சி.தவரத்தினம் மேற்கொண்டதுடன், சகல பகுதிகளுக்கும் குழுவினருடன் சென்று கடற்றொழிலாளர்களின் குறைகள் தேவைகளை ஜப்பானிய பிரதிநிதிகளுக்கு விரிவாக எடுத்துக்கூறினர். (21)

## செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பூங்காவனத் திருவிழா 24ஆம் திகதியும், புதிய தேர் வெள்ளோட்டம் 27ஆம் திகதியும், சப்பறத் திருவிழா 28ஆம் திகதியும், தேர்த்திருவிழா 29ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 30ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

தீர்த்தத்திருவிழாவும் அன்று பிற்பகல் 5 மணிக்கு மௌனத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. மகோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

## சித்தி பெறத்தவறிய மாணவர்கள் மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும் - கல்லூரி அதிபர் தெரிவிப்பு

உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற பரீட்சையில் தேர்ச்சிபெறாத மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த வருடம் நடத்தப்பட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, உயர் தேசிய வியாபார நிதியியல் டிப்ளோமா, உயர் தேசிய வியாபாரக் கற்கைநெறி ஆகிய பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறிய மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு உயர் தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்றும் மீள் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (லெ)

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

**கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.**

அலுவலக நேரம் :- திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8.00 மணி தொடக்கம் 5.00 மணி (விடுமுறை நாட்கள் தவிர)

| | |
|---|---|
| 44. விக்கிரமாதித்தன் செல்வராணி | 240, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 45. கொலின்ஸ் கீதா | 17/7, கடற்கரை வீதி, குருநகர். |
| 46. குருசாமி சிவானந்தன் | 72, நாவலர் வீதி, நாவாந்துறை. |
| 47. முத்துராசா மேரி கில்டா | 559/51, வசந்தபுரம், 2ஆம் குறுக்கு, கொழும்புத்துறை. |
| 48. சின்னப்பு லோறன்ஸ் | 63, புதிய கடற்கரை வீதி, குருநகர். |
| 49. அன்டன் கொன்ஸ்டன்டைன் டொரத்தி | 8, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். |
| 50 விஜயராசா பரமேஸ்வரி | 7/8 பிறவுண் வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 51. நாகராசா ஞானமலர் | 498, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| 52. தியாகராசா ஜெகதாம்பாள் | 210, 6ஆம் குருக்குத்தெரு, மணியந்தோட்டம். |
| 53. சந்திரதாஸ் சிவராணி | 149, 5ஆம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம். |
| 54. மரியதம்பி | பரிசுத்த சிலுவை சுகாதார நிலையம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். |
| 55. அன்டனி கிறிஸ்டி பிறேமாவதி | 21, நாவலர் வீதி, நாவாந்துறை. |
| 56. சவரிமுத்து மேரி கிலேஸ்வரி | 21, நாவலர் வீதி, நாவாந்துறை. |
| 57. பூராணநாதன் ஆயித்தபிள்ளை | 141, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| 58. விஜயராசா செல்வா | 221, 7ஆம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம். |
| 59. கிருஷ்ணராசா ரேவதி | 223, 6ஆம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம். |
| 60. பிரான்சிஸ் ஜானகி | 15, மத்திய கிழக்கு வீதி, குருநகர். |
| 61. செல்லையா பிரான்சிஸ் | 219, 6ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம். |
| 62. மலர் பௌலீஸ் | 91/9 டேவிட் வீதி, குருநகர். |
| 63. பாவிலு சார்ள்ஸ் | 52, கடற்கரை வீதி, குருநகர். |
| 64. யூட் மரிய பிறீடா | கற்குளம் வீதி, கொட்டடி. |
| 65. அருளப்பு மேரி அனிட்டா | 5, புதிய வீடமைப்புத் திட்டம். |
| 66. செபஸ்தியான்பிள்ளை றீட்டம்மா | 1, கொட்டடி வீதி, நாவாந்துறை. |
| 67. சேவியர் பிரான்சிஸ்கா | 112, மணியந்தோட்டம். |
| 68. கந்தையா யோகரத்தினம் | 44A கடற்கரை வீதி, றெக்ளமேசன், குருநகர். |
| 69. விஜயரத்தினம் தனலட்சுமி | 39, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். |
| 70. சிவராசா நாகேஸ்வரி | 143/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| 71. கலாதாஸ் கமலகுமாரி | தண்ணீர் தாங்கி வீதி, குருநகர். |
| 72. மார்க்கண்டு உமாதேவி | ஐந்து சந்தி தபாற்கந்தோர், வண்ணார்பண்ணை. |
| 73. மாரிமுததர் ஞானசேகரம் | 9ஆம் குறுக்குத் தெரு, பொம்மைவெளி. |
| 74. பாஸ்கரன் மேரி கஜோர் | 71, 5ஆம் குறுக்குத் தெரு, மணிப்புரி, மணியந்தோட்டம். |
| 75. நவரத்தினம் கண்மணி | செல்லக்கிளி அம்மான் இடம்பெயர்ந்தோர் முகாம், அரியாலை. |
| 76. சில்வெஸ்டர் மாரியம்மா | குருசோ வீதி, யாழ்ப்பாணம். |
| 77. சொமெசுதீம் வசந்தலட்சுமி | 20/1, எழிலூர், கொழும்புத்துறை. |
| 78. அருளானந்தன் லூர்த்தம்மா | 17/6, கடற்கரை வீதி, குருநகர். |
| 79. நாகரத்தினம் கமலாதேவி | 493, கமால் வீதி, யாழ்ப்பாணம். |
| 80. வேலுப்பிள்ளை ராஜேஸ்வரி | 78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| 81. கணேசன் புனிதவதி | 34, 2ஆம் குறுக்குத்தெரு, மணிப்புரி, கொழும்புத்துறை. |
| 82. கஸ்பார் வில்பேட் | 19/4, பூங்கா வீதி, குருநகர். |
| 83. பரமநாதர் குணசேகரம் | 85, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். |
| 84. அருணாசலம் இலங்கரத்தினம் | போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். |
| 85. பேர்னாட் றீகன் | சூசையப்பர் கோவிலடி, அச்சுவேலி. |
| 86. மணிமாறன் ரதிதேவி | மே/பா முத்துலிங்கம், நீர்வேலிச் சந்தி. |
| 87. செல்லன் யோகேஸ்வரன் | மாதா கோவில் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு. |
| 88. அக்னஸ் மரிய ஜோர்ஜ் குணராசா | 132, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். |
| 89. ச. தவராசா | சல்லை, வளளாய், அச்சுவேலி. |
| 90. க.ரகுபதி | அம்மன் கோவில், ஊரெழு. |
| 91. சதாசிவம் அங்கயற்கண்ணி | கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு. |
| 92. கிட்ணன் விமலராசா | வளளாய் மேற்கு, அச்சுவேலி. |
| 93. முத்துத்தம்பி சோதிப்பிள்ளை | மே/பா. வேலுப்பிள்ளை, சிறுப்பிட்டி மத்தி. |
| 94. சுப்பையா கனகரத்தினம் | ஆவரங்கால், புத்தூர். |

(c/2924)

(தொடரும்)

# சங்கானையில் விவசாய நிலங்களில் அதிகரித்து வரும் பாதீனியங்கள்

சங்கானை மண்டியக்குளம், தனியார் வளவுகளில் பாதீனியச் செடிகள் அதிகமாகி கூடிய நிலப்பரப்பில் வளர்ந்துவருவதாக இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தக் குளத்திற்கு சமீபமான பகுதிகளில் விவசாயம் செய்யும் வயல்களில் காணப்படுவதால், வயல்களிலும் இச் செடி பரந்து வளர்ந்து பயிர்ச்செய்கையை பாதித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். உரியகாலத்தில் இதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

# "செல்போன்" வைத்திருக்க பரீட்சை மண்டபத்தில் தடை

(ஆழியவளை)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் செல்போன், மொபைல் போன் என்பவற்றை வைத்திருப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பரீட்சை வினாத்தாள்களை போட்டோப் பிரதி எடுப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் -

மேற்பார்வையாளர்கள் இவற்றை கவனத்தில் கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (122)

## ஆங்கிலப் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சை

சர்வதேச மாணவர் பேரவை நடாத்தவுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கா பயிலுனர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக பேரவையாளர் தலைவர் தெரிவித்தார்.

## வலி கிழக்கு செயலக முத்தமிழ் விழா

வலிகாமம் கிழக்கு பிரதேசச் செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் முத்தமிழ் விழா சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி சு.சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார்.

இந்த விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நடிகமணி அரியாலையூர் செல்வம் குழுவினரது பூதத்தம்பி எனும் இசை நடனமும் இடம்பெறவுள்ளது. (31)

## கைப்பை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியால் பயணம் செய்து கொண்டிருந்த யுவதியின் கைப்பை இனந்தெரி யாத நபர்களினால் அபகரித்து செல்லப்பட்டது.

இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களே இந்த வீதியால் பயணம் செய்து கொண்டிருந்த யுவதியின் கைப்பையை அபகரித்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (63)

## மீளாய்வு விண்ணப்பங்கள் 23 இற்கு முன்னர் அனுப்புக

(ஆழியவளை)

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இந்தமாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக் கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் த.பெ. இல. 1503 கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். (122)


நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த


தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த


சில தினங்கள் மட்டும்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், விஷாலே, செந்தில் நடித்த
நேதாஜி
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
past Perfect (சி-2723)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 24 . 04 . 1960 |  | 13 . 07 . 2004 |

## அமரர் நீக்கிலாஸ் பாலதாஸ் [சூரியன்]

அணைத்தும் அணையாத சூரியனாக அன்பு, பண்பு, பாசம் ஆகிய முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து அருட் பெரும் சூரியனாய் சங்கமித்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று உடன் வந்து உதவியோருக்கும்,

நேரில் வந்து துயர் துடைத்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், இறுதிச்சடங்கில் பங்குபற்றியோருக்கும்,

தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும்,

நாவாந்துறை கடற்தொழிலாளர்களுக்கும், வாகன வசதி செய்தோருக்கும், உணவு வகைகள் பரிமாறியும், உதவிபுரிந்தோருக்கும், மரணச் சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

13, மணப்பிட்டி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்

(சி/904)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## கடவுச்சீட்டு வழங்கல் கைவிரல் அடையாளம்

கடவுச்சீட்டு வழங்கலின்போது, கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யும் நடவடிக்கை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் கடவுசசீட்டு வழங்கலின்போது துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றதாக வெளியாகியுள்ள தகவல்களின் பின்னரே இந்த நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டுள்ளதாக குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்தது.

பெரும்பாலும் இந்த நடைமுறை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது. இந்த நடைமுறை பல வெளிநாடுகளில் செயற்படுத்தப்படுகின்றபோதும், இலங்கையில் அதனை நடைமுறைப்படுத்த உரிய சட்ட ஒபபுதல் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் சமாதான செயலகத்துக்கு

# தீர்வையற்ற வாகனங்கள் ஐ.தே.க ஆட்சேபிக்காதாம் !

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துக்கு தீர்வையற்ற வாகனங்களை அரசாங்கம் வழங்கியதைக் குறித்து, தாம் ஆட்சேபம் தெரிவிக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிதலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவிக்கையில் -

சமாதான முன்னெடுப்புக்களின்போது, இருபக்க புரிந்துணர்வுக்காக இவ்வாறான நடவடிக்கைகள் அவசியம். ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் வழங்கியபோது, பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் நாடளாவியரீதியில் அதற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தின.

அதற்குப் பின்னரே ஜனாதிபதி சந்திரிகா - ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் கலைத்து, புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், இன்று அதே அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வாகனங்களை வழங்கியதைக்கொண்டு, மக்கள் ஜனாதிபதியின் முன்னைய - பிழையான நடவடிக்கையை உணர்ந்துகொள்வர்.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திடம் முறையான கொள்கையும், திட்டமும் இல்லாததன் காரணமாகவே பொருளாதாரமும், சமாதான நடவடிக்கைகளும அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன.

எவ்வாறாயினும் நாட்டின் நல்லனைக் கருத்திற்கொண்டே, சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனைகளின்றி ஆதரவை வழங்கியது.

சமாதான செயற்பாடுகள் குறித்து, அரசாங்கத்துக்குள் பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

ஆளும் கூட்டணிக்குள் பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும், அரசாங்கம் என்ற வகையில் ஒரேயொரு நிலைப்பாட்டையே கொண்டிருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (01)

## இசற் ஸ்கோர் டிசம்பர் 10 இல் வெளியாகும்

(கொழும்பு)

கல்விப் பொது தராதரப் பத்திரப் பரீட்சையின் Z ஸ்கோர் புள்ளிகள் - டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படும் என பல்கலைக் கழகங்களின் மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

இதன்படி, டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு பல்கலைக்கழகங்களில் கற்கைநெறிகள் ஆரம்பமாகும்.

பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான விண்ணப்ப படிவங்களை இன்று முதல் கொழும்பு - வோர்ட் பிளேஸிலுள்ள மானியங்கள் ஆணைக்குழுவில் பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடம், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவபீடம், திருகோணமலை வளாகம் தவிர்ந்த ஏனைய பல் கலைக்கழகங்கள் டிசம்பர் 31 ஆம் திகதியளவில் ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

## வவுனியா – கொழும்பு பஸ்ஸில் இளைஞர்களிடம் கொள்ளை

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழும்பு சென்ற பஸ் ஒன்றில், பொலிஸார் என ஏமாற்றி இரு இளைஞர்களிடமிருந்து பெறுமதிமிக்க பொருட்களும், பணமும் கொள்ளையடிக்கப்பட் டன.

இந்தியாவில் மேற்படிப்பு மேற்கொள்வதற்கென கொழும்புக்கு விசா எடுக்கச் செல்லும்போதே இந்தக் கொள்ளை இடம்பெற்றது.

கொள்ளையர்கள் பஸ்ஸிலருந்து அனைவரையும் பரிசோதனை செய்த பின்பு, இந்த இரு இளைஞர்களையும் பஸ்ஸிலிருந்து கீழே இறக்கிய பின்பே இந்தக் கொள்ளை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கையடக்கத் தொலைபேசி, நகைகள், பணம் என்று சுமார் ஒரு லட்சம் ரூபா சூறையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆண்டு நிறைவுவிழா

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் நாற்பத்தொன்பதாவது ஆண்டு நிறைவு விழா - சனசமூக நிலையத் தலைவர் ப.விஜயகுமாரன் தலைமையில் இன்று மாலை 7 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (31)

## கூழ்முட்டைத் தாக்குதல் சம்பவம்

## மாணவர்களை அடையாளம் காணும் அணிவகுப்பு இன்று நடைபெறும்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கூழ்முட்டைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் - மாணவர்களை அடையாளம் காணும் அணிவகுப்பு இன்று நடைபெறவுள்ளது.

மூவரைக்கொண்ட விசாரணைக் குழு ஒன்று இந்த அணிவகுப்பை நடத்தும் எனப் பல்கலைக்கழக உபவேந்தர் கபில குணசேகர தெரிவித்தார்.

கடந்த 29 ஆம் திகதி பல்கலைக் கழக சரத்சந்திர மண்டபத்தில் மாணவர்களுக்கிடையல் இடம்பெற்ற மோதல் ஒன்றின்போது, அதனை சமரசம் செய்யச்சென்ற கல்வி சாரா ஊழியர்கள் மீதே கூழ்முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை எதிர்த்து கல்வி சாரா ஊழியர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையிலேயே இந்த அடையாள அணிவகுப்பு நடத்தப்படவுள்ளது.

# ஆயுதங்களை மீள வழங்குமாறு ஈ.பி.டி.பியினர் வேண்டுகோள்

தம்மிடமிருந்து மீளப்பெறப்பட்ட ஆயுதங்களை மீண்டும் வழங்குமாறு ஈ.பி.டி.பியினர் - ஜனாதிபதி சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், இந்துக் கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், தமிழ் ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டன.

ஆனாலும், உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் தமது அமைப்பின் உறுப்பினர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் டக்ளஸ் தேவானந்தா - இதனால் தமது உறுப்பினர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதால், அவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக மீண்டும் தமக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

டக்ளஸ் தேவானந்தாவின் இந்தக் கோரிக்கை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுத்துமூல வேண்டுகோளொன்றைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவித்ததாகவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

# 14 வது தேசிய பல்கலைக்கழகம் ஊவாவில் அமையவுள்ளது

இலங்கையின் 14 ஆவது பல்கலைக்கழகமாக, ஊவாமாகாண பலகலைக்கழகத்தை மாற்றுவதற்கு சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

142 கோடி ரூபா செலவில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்படும் இந்தக் பல்கலைக்கழகத்தில், பட்டப்படிப்புக்கான 17 பாடநெறிகளை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஊவா பல்கலைக்கழகத்தின் பிரதான கட்டடம் பண்டாரவளையில் அமைக்கப்படுவதோடு, பல்கலைக் கழகத்துக்குரிய பீடங்கள் - பிந்துனுவெவ, புத்தளம், பதுளை ஆகிய நகரங்களிலும் அமையவுள் ளன.

இந்தப் பல்கலைக்கழகத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், தேவையான வரவு - செலவு மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குமென பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் அடங்கிய குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## ஐக்கிய தேசியக் கட்சியின்

## நகரசபை உறுப்பினர்கள் எட்டுப்பேர் வெளியேற்றம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த நகர, பிரதேசசபைகளைச் சேர்ந்த எட்டு உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயறகுழுக் கூட்டத்தில் எடுத்த முடிவுக்கு அமைய, இவர்கள் வெளியேற்றப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவின் பரிந்துரைக்கு அமைய இவர்கள் வெளியேற்றப்பட்டதாகவும், இவர்கள் கட்சியின் கூட்டுப் பொறுப்புடன் செயற்படாமை, எதிர்க்கட்சியினர் முன்வைத்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை போன்ற காரணங்களுக்காகவே வெளியேற்றப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்புலிகள் 60 பேர் கிழக்கில் பயிற்சிகளில்

(கொழும்பு)

கிழக்குப் பிரதேசத்தில் புதிதாக இணைந்துகொண்ட கடற்புலிகள் 60 பேர் கடந்த முதலாம் திகதி பயிற்சிகளில் ஈடுபடுவதாக இராணுவத்தினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

நவீன ரக இரு படகுகளில் வாகரை, சம்பூர், கதிரவெளி கடற்பிரதேசங்களில் வைத்து இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கில்மன் என்பவரால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த நாட்களில் அக்கரைப்பற்றில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் 10 பேரில 8 பேர இந்தப் பயிற்சிக்காக அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் இராணுவத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

# பொ.ஐ.மு நிறைவேற்றுகுழவை கூட்டுமாறு அவசர கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முனனணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தை, உடனடியாகக் கூட்டவேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியில் அஙகம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரான டி.எம். ஜெயரத்னவுக்கு இது தொடர்பான- எழுத்துமூல வேண்டுகோள் கட்சித் தலைவர்களால் அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது.

சமாதான முயற்சி குறித்து, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி-கடும் எதிப்புத்தெரிவிதது வரும்நிலையிலேயே, பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகள், மாற்று நடவடிக்கை எடுப்பதற்காக நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தைக் கூட்டுமாறு கோரியிருப்பதாகத் தெரியவருகிறது.

சமாதான முயற்சிகள் தொடரப்பட்டால், ஜே.வி.பி - ஆளும்கூட்டணியிலிருந்து விலகிவிடப்போவதாக எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், இப்படியானதொரு நெருக்கடியை எதிர்கொள்வது குறித்து ஆராயவே பொது ஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழுவைக் கூட்டுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (01)

## காணி சீர்திருத்தத்தின் கீழ் விமுக்திக்கு காணியா?

ஜனாதிபதியின் செயலாளர் மறுப்பு

தாம் காணி அமைச்சராக இருநதபோது - மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி சந்திரிகாவின் மகளான விமுக்திக்கும் காணி வழங்கப்பட்டதாக, முன்னாள் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன சுமத்திய குற்றச்சாட்டை ஜனாதிபதியின் செயலர் டபிள்யூ. ஜே.எஸ்.சேனாரத்ன மறுத்துள்ளார்.

தாம் அமைச்சராக இருந்த வேளையில் அரசாங்கக் காணிகளைத் துஸ்பிரயோகம் செய்ததாக, ஜே.வி.பி சுமத்திய குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே, ராஜித சேனாரத்ன இந்தத் தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதற்குப் பதிலளித்த ஜனாதிபதியின் செயலர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். (01)

# சமாதானம் நோக்கிய நகர்வில் எந்தவொரு மாற்றமும் இல்லை

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டில், எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை என - சிறிலஙகா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பலா வெவ்வேறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றபோதிலும், அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்பு போலவே இருக்கிறது.

நிரந்தர சமாதானத்தை நோக்கப் பயணிப்பதே சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற வகையில், சமாதான நடவடிக்கை தொடர்பாக ஆரம்பம் முதல் ஒரே நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம். இதில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை.

ஜனாதிபதியின் தலைமையிலேயே நிரந்தர சமாதானத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிரந்தர சமாதானமே ஜனாதிபதியினதும், கூட்டமைப்பினதும் தெளிவான நிலைபபாடாகும்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான செயற்திட்டத்துக்குள் நுழைவது குறித்த தீர்மானங்களை ஆளும் கூட்டணியுடனும் கூட்டமைப்புடனும், ஜனாதிபதியுடனும் இணைநது செயற்படும் அதிகாரிகளே மேற்கொள்வர் எனவும் அவர் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட்

# முதல் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்கள்



(கொழும்பு)

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்றுத் தொடங்கிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி - ஆட்டநேர நிறைவில் 3விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைக் குவித்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆரம்பத் துடுப்பாட்டக் காரர்களாக அத்தப்பத்துவும், ஜெயசூர்யாவும் களமிறங்கினர்.

இதில் அத்தப்பத்து பொலக்கின் முதலாவது ஓவரிலேயே 4 பந்துகளைச் சந்தித்து ஒரு பவுண்டரியுடன் 4 ஓட்டங்களைப் பெற்றநிலையில் அடுத்த பந்தில் பௌச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஜெயசூர்யாவுடன் இணைந்தவர் சங்ககார. இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில், அணி 99 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஜெயசூர்யா 59 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் நிக்கிபோஜியின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் சங்ககாரவுடன் இணைந்தவர் மஹேல ஜெயவர்த்தன. இவர்கள் இருவரும் 3 ஆவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக தென்னாபிரிக்காவுக்கெதிராக 192 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டில் டேபன் நகரில் நடந்த போட்டியில் பெற்ற 168 ஓட்டங்களே இலங்கை அணியின் சாதனையாக இருந்தது.

இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில், ஆட்டம் நிறைவடையும் நேரம் நெருங்கும்வேளை மஹேல ஜெயவர்த்தன 210 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 82 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் என்ரினியின் பந்து வீச்சில் போல்டானார்.

இதில் சங்ககார 57 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், சிலிப் திசையில் நின்ற கலிஸ் பிடியொன்றைத் தவறவிட்டார். அதேபோல 16 ஓட்டங்களை மஹேல பெற்றிருக்கையில் நிக்கிபோஜியின் பந்து வீச்சில் பிடியொன்றை விக்கெட் கீப்பர் பௌச்சர் தவறவிட்டார்.

ஆட்டநேரம் முடிவடையும்வேளை ஆட்டமிழக்காமல் சங்ககார 157, சமிந்த வாஸ் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். சங்ககார 150 ஓட்டங்களுக்கு மேல் பெறுவது இது மூன்றாவது முறையாகும். அத்துடன் இது இவரது ஆறாவது சதம் என்பதுடன், 3000 ஆயிரம் ஓட்டங்களையும் டெஸ்ட் போட்டிகளில் கடந்துள்ளார்.

பந்துவீச்சில் பொலக், என்ரினி



மற்றும் நிக்கிபோஜி மூவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப போட்டியில் இரு அணிகளும் வீரர்களை மாற்றம் செய்துள்ளன. இதன்படி இலங்கை அணியில் முரளிதரன் தோள் மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக விளையாடவில்லை. இவருக்குப் பதிலாக ரங்கன ஹேரத்தும், பர்வேஷ் ம.்.றூப் பிற்குப் பதிலாக லசித் மலிங்கவும் இணைக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்க அணியில் சகலதுறை வீரர் லான்ஸ் குளூஸ்னர் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக விளையாடாத காரணத்தால், அவருக்குப் பதிலாக ஹேர்சல் கிப்ஸ் இணைக்கப்பட்டுள்ளார்.




# இரு நாட்டு அமைச்சர்களுக்கு எதென்சில் நுழையத் தடை!

(எதென்ஸ்)

ஐரோப்பிய யூனியனின் தடையின் காரணமாக சிம்பாப்வே, மியன்மார் விளையாட்டு அமைச்சர்கள் ஒலிம்பிக் போட்டியின் போது எதென்ஸுக்குள் நுழையத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சிம்பாப்வே விளையாட்டு அமைச்சர் ஏனியாஸ் சிக்வாதர், மியன்மார் விளையாட்டு அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் துரா ஆயேமியின்ட் ஆகியோர் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியை நேரில் காணமுடியாது. சிம்பாப்வே அதிபர் றொபர்ட் முகாபே மற்றும் அந்த நாட்டின் 90 உயர் அதிகாரிகள் ஆகியோர் எந்த ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் செல்ல 2002 இல் ஐரோப்பிய யூனியன் தடைவிதித்தமை குறிப்பிடத்தக்கது.



நாளை ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிக்காக எதென்ஸில் தயாராகியுள்ள எழில்மிகு அரங்கமொன்றுக்கு முன்னர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸார் ஒருவர்

# இலங்கை அணிக்கு எதிரான தொடரைக் கைப்பற்றுவோம்!

## தென்னாபிரிக்க அணித்தலைவர்

(கொழும்பு)

இலங்கை அணிக்கு எதிராக நேற்றுத் தொடங்கிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெறும் என்று அந்த அணியின் கப்டன் கிரேம் ஸ்மித் நம்பிக்கை தெரிவித்தார்.

தென்னாபிரிக்க அணி இலங்கையில் பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்களில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி சென்ற வாரம் காலியில் நடைபெற்றது.

அந்தப் போட்டியில் இலங்கை அணி தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 325 ஓட்டங்களை நிர்ணயித்தது. இருப்பினும் தென்னா



பிரிக்க வீரர்கள் சிறிதும் பதற்றமின்றி 5 ஆவது நாள் முழுவதும் ஆடுகளத்தில் நின்று இலங்கையின் பந்துவீச்சை அலட்சியமாக எதிர்கொண்டு அந்தப் போட்டியைச் சமன் செய்தார்கள்.

3 விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களை இரண்டாம் இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி எடுத்து இலங்கையின் வெற்றிக் கனவைத் தகர்த்துவிட்டது.

கடைசி நாளில் சிறிது கூடப் பதற்றமில்லாமல் ஆடிய எங்கள் வீரர்களின் அணுகுமுறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்த ஆட்டத்தில் எங்களது தன்னம்பிக்கை கூடியிருக்கிறது. கடைசியாக எங்கள் அணி ஆடிய 5 டெஸ்ட் தொடர்களில் நான்கை வென்றுள்ளோம்.

இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடர் மட்டும் (மூன்று வருடங்களுக்கு முன்பு) சமனில் முடிந்திருந்தது.

இந்த முறை இலங்கையில் தொடரை வெல்லமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது.

கொழும்பில் நடைபெறும் போட்டியில் எங்கள் அணி வெற்றிபெறும் என்று தென்னாபிரிக்க அணியின் கப்டன் கிரேம் ஸ்மித் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

## மினி உலகக் கிண்ண நியூஸிலாந்து அணி அறிவிப்பு

மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ளும் நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து அணி விபரம் வருமாறு -

ஸ்ரீபன் பிளெமிங் (கப்டன்), அஸ்லே, பட்லர், கெயின்ஸ், ஹரிஸ், ஸ்ரைரிஸ், மார்ஷல் மக்மிலன், மில்ஸ, ஜேக்கப் ஓரம், ர.்.பி, வெட்டோரி, பப்ஸ், பிரன்டன் ஆகியோர் அடங்குவர்.

## பந்துவீச்சில் பொலக் முதலிடம்



(லண்டன்)

டெஸ்ட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் வரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

அதன்படி துடுப்பாட்டத்தில் இந்திய வீரர் ராகுல் ராவிட் முதலிடத்தைப் பிடித்துள்ளார். மத்யூ ஹைடன் (அவுஸ்ரேலியா) இரண்டாவது இடத்திலுள்ளார். இந்திய வீரர்கள் டெண்டுல்கர் 8 ஆவது இடத்திலும், வீரேந்தர் ஷேவாக் 9 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் பொலக் (தென்னாபிரிக்கா) முதல் இடத்திலும், முரளிதரன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர் கும்ப்ளே மூன்றாவது இடத்திலுள்ளார்.




## மொன்ட்ரியல் சம்பியனாக மவுரஸ்மோ தெரிவு!



(மொன்ட்ரியல்)

கனடாவில் நடைபெற்ற முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற மொன்ட்ரியல் ரெனிஸ் தொடர் இறுதிப்போட்டிக்கு பிரான்ஸ் வீராங்கனை அமெலி மவுரஸ்மோ, ரஷ்யாவின் எலினா லிகோவ்ட்சேவா ஆகியோர் தகுதிபெற்றனர்.

நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் மவுரஸ்மோ 6-1, 6-0 என்ற சுலப செட்களில் எலினாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

51 நிமிடங்களில் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இந்த ஆண்டில் மவுரஸ்மோ கைப்பற்றும் 3 ஆவது சம்பியன் பட்டம் இதுவாகும்.

## உள்ளூராட்சி வார கிரிக்கெட்—

# வலி.வடக்கு, மானிப்பாய் அணிகள் காலிறுதி ஆட்டங்களில் வெற்றி!

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு - மானிப்பாய் பிரதேசசபை ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில்- சனிக்கிழமை நடந்த ஆட்டங்களில் வலி. வடக்குப் பிரதேசசபை அணியும், மானிப்பாய் பிரதேசசபை அணியும் வெற்றி பெற்றன.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வலி.வடக்கு பிரதேசசபை அணி 14 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது. தயாபரன் 25 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மோகனரூபன் 3 விக்கெட்டுக்களையும், பிரசன்னா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வேலணைப் பிரதேசசபை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்ரீ முரளிதரன் 23, முகுந்தன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜெயக்குமார் 3, ரவீந்திரநாத் 2, அரசரத்தினம் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இறுதியில் வலி. வடக்குப் பிரதேசசபை 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதேவேளை, அதேதினம் நடைபெற்ற இரண்டாவது சுற்று காலிறுதியாட்டத்தில் - சாவகச்சேரி நகரசபை அணியை எதிர்த்து மானிப்பாய் பிரதேசசபை அணி விளையாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி நகரசபை அணியின் சார்பாக மயூரன் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், மணிமாறன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். 13 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து சாகவச்சேரி நகரசபை அணி 59 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் நித்திலவர்ணன் 3 விக்கெட்டுக்களையும், கமலகாந்த் 3 விக்கெட்டுக்களையும், லக்ஸ்மன், சிவசுதன், அகிலன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

60 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மானிப்பாய் பிரதேசசபை அணியின் ஆரம்ப ஆட்டக்காரரான லக்ஸ்மனும், அகிலனும் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடி விககெட் இழப்பின்றி 8 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

அந்த அணியின் சார்பாக லக்ஸ்மன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும், அகிலன் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு வழி சமைத்தனர். (100)

# சிறையில் அடைக்கப்பட்டிருப்பவரை விடுவிக்க உதவுமாறு கோரிக்கை!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

உயிருடன் இருப்பவரைக் கொலை செய்ததாகத் தெரிவித்து, சிறையில் அடைக்கப்பட்டுள்ளவரை விடுவித்துத் தருமாறு, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்துத் தெரியவருவதாவது -

கடந்த வருடம் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வவுனியாவில் வசித்துவந்த பொன்னையா செல்வராஜா என்பவரை, அதே இடத்தில் வசித்துவந்த இராகவன் தங்கவேல் என்பவர் கொலை செய்துவிட்டதாக செல்வராஜாவின் எட்டு வயது மகனான டிசான் என்பவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு கொடுத்திருந்தார்.

இதனையடுத்து வவுனியா பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இராகவன் தங்கவேலைக் கைது செய்து விசாரணை நடத்தி வந்தனர். அவர் கைதுசெய்யப்பட்டது முதல் அநுராதபுரம் சிறைச்சாலையிலேயே அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

தந்தையுடன் மட்டும் வாழ்ந்து வந்த டிஷான் (வயது 8), டேவிட் (வயது 12) ஆகிய சிறுவர்கள் இருவரும் தமது தாயைக் கூட்டிச்சென்ற தங்கவேல்தான் தமது தந்தையைக் கொன்றிருக்க வேண்டுமெனத் தெரிவித்து, வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்தே, வவுனியா பொலிஸார் அவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்ததுடன், அநாதரவான இரு சிறுவர்களையும் அனாதை ஆச்சிரமம் ஒன்றிலும் சேர்ப்பித்தனர்.

இந்த நிலையில் தங்கவேலின் உறவினர்கள் - செல்வராஜ் யாழ்ப்பாணத்தில் உயிருடன் இருப்பதை அறிந்து வவுனியா நீதிமன்றில் விடயத்தைத் தெரிவித்தனர்.

இறந்து போனதாகக் கூறப்படுபவர் உயிருடன் இருப்பதாகக் கூறுவதை நியாயப்படுத்தும் வகையில் செல்வராஜை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதனையடுத்து, தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், உயிருடன் இருப்பவர் தமது உறவினரின் விடுதலைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்துமே யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ப)

## மின்விளக்கு பொருத்தும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினர் தமது எல்லைப் பராமரிப்புக்குட்பட்ட வீதிகளுக்கு மின் விளக்குப் பொருத்தும் நடவடிக்கையை நேற்று முன்தினம் முதல் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஆரம்பக் கட்டமாக - ஆடியபதம் வீதி, கலாசாலை வீதிகளுக்கு மின் குமிழ்களைப் பொருத்தியுள்ளனர்.

அடுத்த கட்டமாக ஏனைய வீதிகளுக்கும் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர். (63)

# வடமராட்சி கடற்பரப்பில் சாளை மீனினம் அதிகரிப்பு

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் - முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் சாளை இனத்தைச் சேர்ந்த ஒரு வகை மீனினம் சூடை வலை, கரைவலை மீன்பிடித்தலின் போது அதிகமாக அகப்படுகிறது.

பேய்ச்சாளை எனப் பெயரிட்டு அழைக்கப்படும் இந்த மீனினத்தை உணவுத் தேவைக்குப் பயன்படுத்துவதை மக்கள் விரும்புவதில்லை. குடல் மிக நீளமானதும், கொழுப்புத் தன்மை கூடியதுமான இந்த மீனினம் சந்தைப்படுத்த முடியாத நிலையில் - கொழுப்புத் தன்மை கூடியதால், உப்பிட்டுக் கருவாடாகப் பதனிடும் பொழுது உதிர்ந்து விடுகிறது. அதனால், பிடிபடும் மீன் முழுவதையும் மீண்டும் கடலிலேயே கொட்டிவிடுகின்றனர்.

வலைகளில் கூடுதலாக இந்த மீன்கள் பிடிபடுவதால் பிரித்தெடுக்கும்பொழுது வலைகள் சேதமடைந்துவிடுகின்றன.

இந்த மீனினம் கடற்பரப்பில் கூடுதலாகக் காணப்படுவதால், சூடைவலை, கரைவலைத் தொழில்களில் நல்லின மீன் வகைகளின் பிடிபடும் தொகையானது வெகுவாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த மீனினம் கடந்த இரண்டு மூன்று வருடங்களாகவே வடமராட்சி கடற்பரப்பில் பிடிபடுவதாகவும் அதற்கு முன்னர் இந்த மீனினம் பிடிபடுவதில்லையெனவும் கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர். (21)

# எயிட்ஸ் மருந்துக்கென உலக வங்கி நிதியுதவி!

எயிட்ஸ் நோய்க்கான மருந்துக்கென உலக வங்கி இலங்கைக்கு 12 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

இதன் மூலம் இலங்கையில் பெறமுடியாததும், அதிக விலையுடையதுமான எயிட்ஸ் தடுப்பு மருந்தை - அரசாங்க வைத்தியசாலையில் இனிவரும் காலங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக, சுகாதாரத் திணைக்களத்தின் எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன், அரசாங்க சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 552 எயிட்ஸ் நோயாளர்களில் 100 பேர்வரை இந்த நிதியுதவியில் பயனடைவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (17)

# பஸ்நிலைய விளம்பர சேவையால் மக்களுக்கு பெரும் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள விளம்பர சேவையின் ஒலிபெருக்கிச் சத்தத்தினால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை யாழ். மாநகர சபை அலுவலகத்தில் இடம்பெற்ற செயற்பாட்டுக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட விளம்பர சேவையின் ஒலிபெருக்கியின் சத்தத்தின் அளவைக் குறைக்கும்படி கடிதம் மூலம் அறிவிப்பது என்றும், குறிப்பிட்ட விளம்பர சேவை இந்த வேண்டுகோளை கருத்திற்கொள்ளாத பட்சத்தில் இந்த விளம்பர சேவையை இடைநிறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# திருக்குறள் மனனப் போட்டிக்கு மாணவர் விண்ணப்பிக்கலாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு தழுவிய மாபெரும் திருக்குறள் மனன ஒப்புவித்தற் போட்டி - எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர் மட்டத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி 4, 5 ஆம் தரங்களை உள்ளடக்கி - கீழ்ப் பிரிவாகவும், 6, 7, 8, 9 ஆம் தரங்களை உள்ளடக்கி - மத்திய பிரிவாகவும், 10, 11, 12, 13 ஆம் தரங்களை உள்ளடக்கி - மேற்பிரிவாகவும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் - கடவுள் வாழ்த்து முதல் புகழ் என்ற அதிகாரம் வரையான 240 பாடல்களும்,

மத்தியபிரிவு மாணவர்கள் - இல்லறவியல், துறவறவியல் அடங்கிய 38 அதிகாரங்களும்,

மேற்பிரிவு மாணவர்கள் - அறத்துப்பால் முழுவதும், பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல் உள்ளிட்ட 78 அதிகாரங்களையும் கருத்துத் தெளிவு, சிறந்த உச்சரிப்புத் தொனியுடன் ஒப்புவித்தல் மிகவும் அவசியம்.

அதிகூடிய குறட்பாக்களை மனனம் செய்து ஒப்புவிப்பவருக்கு விசேட பரிசாக 5 ஆயிரம் ரூபா பணப் பரிசாக வழங்கப்படும்.

இதைத்தவிர ஒவ்வொரு பிரிவிலும் -

1 ஆம் இடம் பெறுபவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாவும், 2 ஆம் இடம் பெறுபவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாவும், 3 ஆம் இடம் பெறுபவர்களுக்கு ஆயிரம் ரூபாவும் பணப் பரிசாக வழங்கப்படும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் 'திருக்குறள் மனனப்போட்டி அமைப்பாளர், யாழ்.கல்வி வலயம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(101)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ர.ராஜ்கரன்
முகவரி : லக்கி ஹவுஸ்
ஜெய்நகர், திருச்சி

ஐந்தாவது அகவையில்



பெயர் : சா.மதுஷா
முகவரி : ஞானவைரவர் கோவிலடி.
இணுவில்.


# பருத்தித்துறை கல்லூரி வீதியில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை கல்லூரி வீதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன. இதனால், இந்த வீதியால் செல்லும் மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும், பொதுமக்களும் பெரும் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுகிறது.

இந்த வீதி வடமராட்சியின் இரு பிரதான பாடசாலைகளுக்கும் இடையில் இருப்பதால், குறிப்பிட்ட ஒரே வீதியால்தான் மாணவர்கள் பயணம் செய்யவேண்டியுள்ளது.

இந்த வீதியால் மாணவ மாணவிகள் சைக்கிளிலும், நடந்தும் செல்லும்போது இந்தக் கட்டாக்காலி நாய்களின் பெருந்தொல்லைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இதுதவிர இந்தக் கட்டாக்காலி நாய்கள் வீதிகளை அசிங்கப்படுத்துதல் போன்ற அசௌகரியங்களையும் ஏற்படுத்துகின்றன. இதனால் இந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது.

இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனத்தில் கொண்டு, நாய்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# சிகை ஒப்பனையாளர்களுக்கான கட்டுப்பாடுகள் சில தளர்த்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் கடைப்பிடித்து வந்த சில கட்டுப்பாடுகளை, புதிய நிர்வாகம் தளர்த்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இரவு 8 மணியுடன் மூடப்பட வேண்டிய நிலையங்களை - நிலைய உரிமையாளர்கள் 130 பேர்கள் கையெழுத்திட்டு வழங்கிய பிரேரணைக்கு அமைவாக, இரவு 9 மணிவரை நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தடைசெய்யப்பட்டிருந்த கிராமியத் தொழிலாளர்கள் தொழில் செய்வதற்கும், புதிய நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது.

எனினும், கிராமியத் தொழிலாளர்கள் கௌரவக் குறைவாக நடத்தப்படக்கூடாது என்ற நிபந்தனையுடன், இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும், தற்சமயம் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள 16 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (206)

## திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில்

# நடைபாதை வியாபாரிகளால் போக்குவரத்துக்கு இடையூறு

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் வியாபாரிகள் வீதியோரங்களில் - தமது விற்பனைப் பொருட்களைப் பரப்பிவைத்து, தினமும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதனால் வீதியால் போக்குவரத்து செய்யும் மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆடியபாதம் வீதியின் இரு பக்கங்களும் புடவை, இலத்திரனியல் பாகங்கள், மற்றும் சட்டி பானை போன்ற பொருட்கள் வியாபார நடவடிக்கைக்காக பரப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சைக்கிள்களை வீதியின் பக்கங்களில் தரித்து விடப்படுவதனாலும் வீதி குறுகியுள்ளது. பாதசாரிகள் பயணம் செய்வதற்கு வீதியின் மத்திய பகுதிக்கு செல்வதனால் தினமும் வாகனங்களுக்கிடையில் சிக்கி சிறுசிறு விபத்துக்கள் நடைபெறுகின்றன. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், வீதி ஒழுங்கை பராமரிப்பவர்கள் கருத்தில் எடுத்து வியாபாரம் செய்ய நிரந்தர அல்லது தற்காலிக விற்பனை நிலையம் ஒன்றை, சந்தை வளவினுள் அமைப்பதன் மூலமும்,

சைக்கிள்களை அதற்காக ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு நிலையத்தினுள் தரிக்க மக்களை நிர்ப்பந்திப்பதன் மூலம் மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் பயணம் செய்ய வசதியாக இருக்கும் என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இதனைச் சீர்செய்யாவிடின் எதிர்காலத்தில் மக்கள் பயணம் செய்ய காலை 6 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை இந்த வீதியைப் பயன்படுத்த முடியாமல் போகலாமென்றும் கருதப்படுகிறது. (63)

# வட்டக்கச்சி கண்காட்சி குறித்து நாளை கலந்துரையாடல்

செப்ரெம்பர் முதல்வாரத்தில் வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் - தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி விற்பனையில், கடற்தொழிற்துறை உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கலந்துரையாடி முடிவு செய்வதற்குரிய கூட்டமொன்று நாளை காலை 10.30 மணிக்கு சம்மேளனப் பணிமனையில் நடைபெறுமென, யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

இந்த அறிவித்தல் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச மட்டக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (21)



## தொழில் மலர்

# ஆற்றலை வெளிப்படுத்தி சவாலை எதிர்கொண்டு முன்னேற உதவுவது உந்துசக்தியே

ஒருவர் தன்னுடைய தொழிலில் மகிழ்ச்சியையும், வெற்றியையும்பெற 'உந்து சக்தி' மிகவும் தேவையான ஒன்றாகும். அவர் தன்னிடமுள்ள உந்து சக்தியால் தொழிலில் வெற்றியை எளிதில் பெறுகிறார். இந்தச் சுய உந்து சக்தியானது, இரண்டு பரிமாணங்களைக் கொண்டது.

ஒன்று - தன் மனதைச் சார்ந்தது. அது நாம் எதிர்காலத்தில் என்னவாக வேண்டுமென்பதைக் குறிக்கிறது.

இரண்டாவது - செயல் பற்றியது. இது எப்படிச் செயற்பட்டால், நாம் அந்தக் காரியத்தைச் செய்துமுடிக்க முடியும் என்பதைத் தீர்மானிப்பது. ஆதலால், சுய உந்துதலுள்ள மனிதன் எந்தக் காரியத்திலும் ஒரு நோக்கத்தை வைத்துக்கொண்டு, அதன்படி செயற்பட்டு வெற்றி பெறுகிறான்.

உந்துதல் உடையவன் தொழிலில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நேர்மறையாகவே சிந்திக்கிறான். ஓர் குறிக்கோளை ஏற்படுத்திக் கொண்டு, தரமான வழி முறையோடு, செல்ல வேண்டிய இடத்தைச் சென்றடையவேண்டும். உந்துசக்தி உடையவன், தனக்கென்று நடத்தை முறைகளை வைத்துக் கொண்டு, சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உழைக்கிறான்.

சுற்றுப்புறச் சூழல்களுக்கேற்ப எங்களுடைய மனம், எங்களைச் செயற்படத் தூணடுகின்றது. அதுவே உந்துசக்தியாகும். எங்களுடைய மனதில் உருக்கொள்ளும் எண்ணத்தில் நம்பிக்கை வைத்து, அதைச் செயலாக்கம் செய்வது எம்முடைய மனமே. எனவே, எம் மனதைச் சிந்தித்துச் செயற்பட வைக்க, நாம் மேற்கொள்ளும் பணிக்கு அல்லது தொழிலுக்குத் துணையாக இருக்க, நாம் சில பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

1. எம்மால் முடியும் என்று நம்புவது.
2. நல்லவற்றைச் சிந்திப்பது.
3. எம்முடைய அறிவைப் பயன்படுத்துவது.
4. எதிர்மறையாகச் சிந்திப்பதைத் தவிர்த்து நேர்மறையாகச் சிந்திப்பது.
5. பொறுமையாக இருப்பது.
6. எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது.
7. எந்தக் காரியத்திலும் எம்முடைய முழுத் திறமையைப் பயன்படுத்துவது.
8. ஆற்றலை முழுவதுமாக நம்புவது.
9. இலக்கை நிர்ணயித்துக் கொணடு அதைக் குறித்துச் சிந்திப்பது.
10. எம்முடைய மனதைப் புதிய மாற்றுச் சிந்தனைக்குத் திருப்புவது, ஆகியனவாகும்.

ஊழியர் ஒருவர் அல்லது தொழில் முயற்சியாளர் ஒருவர் தன்னை நம்புவதுதான் தன்னம்பிக்கை பெறுவதற்கு முதல்வழியாகும்.

தன்னிடம் நம்பிக்கை இல்லாதபோது, அவன் நல்லதை விடுத்து எதிர்மறையாகத் தனது தொழிலில் சிந்திக்கத் தொடங்குகிறான். எதையும் நேர்மறையாகப் பார்க்கும் எண்ணமே, தொழிலில் முன்னேற எமக்கு வாய்ப்பை ஏற்படுத்தித்தருகிறது.

தன்னம்பிக்கையால்தான் ஊழியர் அல்லது தொழில் முயற்சியாளருக்கு மிகப் பெரிய உந்துசக்தி கிடைக்கிறது. அதன் மூலம் அவர்கள் செய்யும் காரியங்களில் ஒரு பொறுப்புணர்வும் பெறுகிறார்கள்.



பொறுப்புணர்வு மிக்கவர்கள் எப்போதும் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பார்கள். அவர்களிடம் தொழில் திறமை வெளிப்படுவதைக் காணலாம்.

தொழில் முயற்சியாளன் தன்னைத் தான் நம்புவதில் நான்கு முக்கியமான அடிப்படைக் கூறுகளைக் கையாளுகின்றான். அவையாவன -

1. வாழ்கையில் நாம் அடைய விரும்பும் குறிக்கோளைப் பட்டியலிட்டுக் கொண்டு, அவற்றுள் எதை முதலில் அடைவது என்பது குறித்துச் சிந்திக்கவேண்டும்.
2. அந்தக் குறிக்கோளை அடைவதற்குரிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.
3. எம்மிடமுள்ள திறமையால், நடத்தையால் குறிக்கோளை எவ்வாறு அடைவது என்பதைப் பட்டியலிட்டுக் கெள்ளவேண்டும்.
4. எம்மிடமுள்ள குறைகளை நீக்கும் வழியறிந்து அவற்றை நீக்கி, அதன் பின் குறிக்கோளை அடைய முயலவேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனக்குள் ஓர் ஆற்றலைப் புதைத்து வைத்துள்ளான். பலர் அதை வெளிக்கொண்டு வந்து பயன்படுத்தாமல் இருப்பதால், அந்த ஆற்றல் வெளிப்படாமலேயே போய்விடுகின்றது.

அதனை வெளிக் கொண்டுவர எமக்குத் தேவை எம்மிடமுள்ள உந்துசக்தி. எம்மிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் -

- ஊக்கமுடைமை - இது எம்மை நேர்மறையாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. நாம் மேற்கொள்ளும் செயல்களில் எம்மை ஊக்கப் படுத்துகிறது. இந்த ஊக்கத்தால் எமக்குள் ஒரு சக்தி பிறக்கிறது. இந்த ஊக்கமுடைமையே எம்மீதும், எம்ஆற்றல் மீதும் நம்பிக்கை வைத்துத் தொழிலில் வெற்றி பெறத் தூண்டுகிறது. மேலும், நாம் மேற்கொள்ளும் செயல்களில் எமக்கு எதிரியாக இருக்கும் அனைத்தையும் தூள்தூளாக்கி எம்மை வெற்றிபெறச் செய்கிறது.
- நினைவாற்றல் - இதன் மூலம் எந்தச் செயலையும் திரும்பத்திரும்ப நினைவில் வைத்துக் கொள்ளமுடியும்.
- படைப்பாற்றல் - புதிதாகச் செய்யக் கூடிய மனப்பாங்கு.

நாம் நேர்மறையாகச் சிந்தித்தால், ஊக்கமுடைமை தோன்றுவதோடு, எம்முடைய நினைவாற்றல், படைப்பாற்றலும் வளரும். இவற்றால் நாம் எதையும் சாதித்துவிடலாம்.

எம்முடைய குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்ய நாம் திட்டமிடுதல் வேண்டும். அன்றாடம் நாம் மேற்கொள்ளும் சின்னஞ்சிறு பயணங்களுக்குக்கூட இலக்குகள் வைத்துக் கொள்கிறோம்.

எங்கே இருந்து, எங்கே போய்ச்சேர வேண்டுமென்பதைத் தீர்மானம் செய்துகொள்கிறோம். அப்படியிருக்கையில் தொழில் சார்ந்த, குறிக்கோளும் அதை அடைவதற்குத் திட்டமிடுதலும் அவசியமாகிறது.

நாம் தொழிலில் பெறவேண்டிய பேறுகள் வெறும் மனக்கோட்டை கட்டுவதால் அல்லது ஆசைப்படுவதால் மட்டும் வந்து விடுவதில்லை.

**எம்மிடமுள்ள தனிப்பட்ட ஆற்றல் எது?**
**அதை எப்படி வளர்த்துக் கொள்வது?**
**ஆற்றலைப் பயன்படுத்தி உழைப்பது எப்படி?**

*நோக்கமில்லாமல் ஊக்கமில்லை.*
*முயற்சி இல்லாமல் உழைப்பு இல்லை.*
*உழைப்பு இன்றிப் பயனும் இல்லை*

என்பதைத் தொழில் முயற்சியாளர்கள் அல்லது ஊழியர்கள் உணர்ந்து கொள்ளும் போது தொழிலில் முன்னேற்றம் நிகழ்கிறது.

தோமஸ் அல்வா எடிசன் மின்சார விளக்கைக் கண்டுபிடிக்கும் முன்பு ஆயிரம்முறை தோல்வி கண்டவர்.

அவர் அவ்வாறு தோல்வி காணவில்லை என்றால், இன்று நாம் 'மின்சார விளக்கு' என்ற கண்டுபிடிப்பைப் பெற்றிருக்க முடியாது. தோமஸ் அல்வா எடிசன் கூறுகிறார்-

'புதிய கண்டு பிடிப்பென்பது அதிஷ்டத்தாலோ, ஒரு விபத்தாலோ வந்தது என்று நினைக்கக் கூடாது. எம்முடைய அறிவாலும், இலட்சியத்தாலும், குறிக்கோள் என்னும் துடுப்பாலும், உழைப்பாலும் வந்ததே புதிய கண்டுபிடிப்பாகும்' என்கிறார்.

ஆகவே, கண்டுபிடிப்பு என்பது மிகவும் உழைத்துப் பெறவேண்டிய ஒன்று. அதற்குக் கடின உழைப்பும், எம்முடைய அறிவைப் பயன்படுத்தும் ஆற்றலும், திறமையும் தேவை. இதற்கு அதிஷ்டம் தேவையில்லை. ஒரு குறிப்பிட்ட துறையில் எம்முடைய அறிவை வளர்த்துக் கொண்டு, ஆற்றலை ஒன்று திரட்டி ஒருமுனைப்படுத்தினால் நாம் புதிய கண்டுபிடிப்புச் செய்யலாம்.

தொழில் வெற்றிகளைப் பொறுத்துத்தான் எம்முடைய மகிழ்ச்சியும் அமையும். மகிழ்ச்சி என்பது நாம் எவ்வளவு உழைக்கிறோம் என்பதைப் பொறுத்தே தீர்மானம் செய்யப்படுகிறது.

எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஏதேனும் ஒருவகை ஆற்றல் மறைந்துள்ளது. அதைத் தேடிக் கண்டுபிடித்துப் பயிற்சியால் மேலும் மெருகேற்றி, எம்முடைய திட்டமிட்ட, கடுமையான உழைப்பால் அதை வெளிப்படுத்த வேண்டும். அப்போது நாம் என்ன வேலை அல்லது தொழில் செய்தாலும் அதைத திறமையோடு, சிறப்பாக எம்மால் செய்ய முடியும்.

ஆகவே, ஒரு தொழில் முயற்சியாளர் அல்லது ஊழியர், தனக்கும் சமுதாயத்துக்கும் பயன்படக்கூடிய இலட்சியத்தை மனதில் வைத்துக்கொண்டு, அதை அடையக் குறிக்கோளையும் முன்வைத்துக்கொண்டு, திட்டமிட்டு உழைக்கத் துணிந்துவிட்டால் அவர்களுடைய வளர்ச்சியை யாரும் தடுக்கமுடியாது. ☆

## குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | 20/= | 25/= | 30/= | 20/= | 20/= | 15/= | 25/= |
| [illegible] | 20/= | 20/= | 30/= | 15/= | 10/= | 25/= | 20/= |
| [illegible] | 100/= | 65/= | 70/= | 80/= | 70/= | 70/= | 70/ |
| [illegible] | 30/= | 30/= | 40/= | 30/= | 20/= | 40/= | 30/= |
| [illegible] | 35/= | 30/= | 40/= | 40/= | 30/= | 30/= | 40/= |
| [illegible] | - | 70/= | 70/= | - | 70/= | 100/= | 80/= |
| [illegible] | 20/= | 25/= | 30/= | 20/= | 20/= | 50/= | 30/= |
| [illegible] | 20/= | 40/= | 40/= | 20/= | 25/= | 20/= | 20/= |
| [illegible] | 30/= | 30/= | 30/= | 30/= | 30/= | 35/= | 30/= |
| [illegible] | 50/= | 50/= | 60/= | 40/= | 50/= | 60/= | 50/= |



# நேரடியாகத் தயாரிக்கப்பட்ட பழரசம் மக்களால் விரும்பிப் பருகப்படும்

நிறைய முதலிட்டுத் தொழில்செய்ய முடியாதவர்கள் வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்கக் கூடிய தொழில் பதனிடப்பட்ட பழரசம், ஜாம் தயாரிப்பாகும். பழங்களிலிருந்து நேரடியாகத் தயாரித்து வழங்கப்படும் பழரசம் (ஜுஸ்) மக்களால் விரும்பிப் பருகப்படும் ஒருபானமாகும்.



இந்த இரண்டையும் சேர்த்து வியாபாரம் செய்யும் நோக்கமுடையவர்கள், மக்கள் அதிகம் நடமாடக்கூடிய அல்லது மக்கள் அதிகம் கூடுகின்ற இடத்தில் கடை அமைத்துச் சம்பாதிக்கலாம். சன நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் பழரசக் கடை திறப்பது கூடுதலான இலாபத்தைத் தரும்.

எனவே, இந்தத் தொழிலில் உள்ள தொழில் நுணுக்கங்கள், இந்தத் தொழிலை இலாபகரமாக நடத்துவது எப்படி என்பதைப் பற்றியும் அறிந்துகொணடு செயலாற்றுவது நல்லது.

பழரசம், பதனிடப்பட்ட பழரசம், ஜாம் செய்து விற்பனை செய்வதுடன், பழங்களையும் விற்பனை செய்யக் கூடியதாக இருக்கும். பழங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்வதால், சந்தையில் கிடைக்கும் விலையை விடவும், குறைந்த விலைக்கு விற்பனை செய்யமுடியும். விற்கப்படாமல் இருக்கும் பழங்களைப் பதனிடப்பட்ட பழரசம், ஜாம் தயாரிக்கப்பயன்படுத்தலாம். இதனால் நட்டமடைய வாய்ப்பில்லை.

மாம்பழம், வாழைப்பழம், பப்பாளிப்பழம், மாதுளம்பழம், அன்னாசிப்பழம், எலுமிச்சம்பழம், பலாப்பழம் போன்ற பழங்கள் எல்லாக் காலங்களிலும் பழமாகவும், பழரசமாகவும் விற்பனை செய்ய முடியும். மேலும் நாவல்பழ ஜுஸ், நெல்லிக்காய் ஜுஸ், கரட் ஜுஸ், பேரிச்சம்பழ சிரப்பு, அறுகம்புல் ஜுஸ், துளசிஜுஸ் போன்றன உடல் நலத்



துக்கும், மருத்துவத்துக்கும் ஏற்றதாகும்.

காய்களாகக் கொள்வனவு செய்து, பழுக்கவைத்து பழரசம் தயாரித்து விற்பனை செய்வதால், கூடுதலான இலாபம் கிடைக்கும். வாங்கிக் குடிப்போரின் முன்னே பழரசம் தயாரித்துக் கொடுப்பதால், நிறையப் பேர் வந்து வாங்கிக் குடிப்பார்கள். இதனால், அன்றாட வியாபாரம் கூடிக்கொண்டு செல்லும்.

மழை, வெயில் போன்ற சீதோஷ்ண நிலையை அனுசரித்துப் பழங்களைக் கொள்வனவு செய்யவேண்டும். விலை குறைவாக தரமானதாக, அந்தந்தக் காலங்களில் கிடைக்கிற பழங்களைக் கொள்வனவு செய்து, சரியான செய்முறை அறிந்து பழரசமாகச் செய்துவைத்துக் கொண்டால் ஒரு வருடத்துக்கு பழுதாகாமல் இருக்கும். குளிர்சாதனப்பெட்டியில் வைக்காமல் வெளியில் வைத்துப் பயன்படுத்தலாம். பதனிடப்பட்ட பழரசம் செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம், அதில் சேர்க்கும் பிரிசர்வேட்டிவ்தான் சோடியம் பென்சோயேட், பொட்டாசியம் மெட்டாபைசல்பேட் போன்றவை பிரிசர்வேட்டிவாக பயன்படுத்தப்படுகிறது. நீண்ட நாள்வரைப் பழுதாகாமல் இருக்கக் கட்டாயம் இதைப் பயன்படுத்த வேண்டும. ஆனால், அதிகம் சேர்க்கக் கூடாது. சொல்லப்பட்ட அளவுகளில் தான் சேர்க்கவேண்டும். இது சீனியிலுள்ள அழுக்கை நீக்க, பழரசத்துக்கு புளிப்புத்தன்மை கொடுக்க, சீனிப்பாகு படிவமாக மாறாமல் இருக்கப் பயன்படுகிறது. அத்துடன் வாசனைக்காக எசன்ஸ் சேர்க்க வேண்டும்.

பதனிடப்பட்ட பழரசம் பழுதாகிப் போகவோ, நட்டம் அடையவோ வாய்ப்பில்லை. தேவையைப் பொறுத்து அளவாகச் செய்து கொள்ளலாம். தினமும் இதற்கென்று தனியாக நேரத்தை ஒதுக்கத் தேவையில்லை. வாரத்தில் ஒருநாள் மட்டும் தயாரித்துக் கொள்ளலாம்.

இதற்குப் பெரிதாகச் சந்தைப்படுத்தல் அறிவு தேவையில்லை. வேறு தொழில் எதுவும் தெரியாது என்பவர்கள்கூட பெரிய தொழில் முனைவோர் என்ற பெயர் எடுக்க முடியாவிட்டாலும், குடும்பத்துக்கு உதவமுடியும் என்ற நம்பிக்கையுடன் ஆரம்பித்து நடத்தக்கூடிய தொழில் இது.

குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய சில பழங்களைக் கொண்டு, பதனிடப்பட்ட பழரசம் செய்வது எப்படி என்பதைப் பார்க்கலாம். இது ஒரு வருடம் வரை பழுதாகாமல் இருக்கும்.

### திராட்சை பழரசம்

**தேவையான பொருட்கள் -** ஒரு லீற்றர் பழரசம் எடுக்கத் தேவைப்படும் கறுப்பு திராட்சைப்பழம் (ஒரு கிலோவில் முக்கால் லீற்றர் கிடைக்கும்) சீனி - 2 கிலோகிராம், தண்ணீர் ஒரு லீற்றர், சிட்ரிக் அமிலம் 4 தேக்கரண்டி, திராட்சை எசன்ஸ் 4 தேக்கரண்டி, சோடியம் பென்சோயேட் 3.2 கிராம்.

**செய்முறை -** திராட்சையைக் காம்பு நீக்கிச் சுத்தப்படுத்தி, மத்து வைத்து மசித்து ஒரே சீரான நிறம் வரும்வரை வேகவைக்கவும். பின்பு வடிகட்டி, 1 லீற்றர் பழச்சாறு எடுத்துத் தனியாக வைத்துக் கொள்ளவும். பின்பு, சீனி, தண்ணீர், சிட்ரிக் அமிலம் கலந்து அடுப்பில் வைக்கவும். சீனிப்பாகு பதத்துக்கு வந்ததும், இறக்கி வடிகட்டி எடுக்கவும். வடிகட்டி எடுத்த சீனிப்பாகை திராட்சைப் பழச்சாற்றில் சூடாகவே கலந்து ஆற விடவும். நன்றாக ஆறிய பின்னர் எசன்ஸ் சேர்க்கவும். சோடியம் பென்சோயேட்டை நீரில் கலந்து ஊற்றவும். கழுவிக் காயவைத்த போத்தலில் ஊற்றி, மூடி வைத்துக்கொள்ளவும்.

### மாம்பழரசம்

**தேவையான பொருட்கன் -** ஒரு லீற்றர் பழரசத்துக்கு தேவையான மாம்பழம் (ஒரு கிலோவில் முக்கால் லீற்றர்) சீனி ஒரு கிலோ, தண்ணீர் ஒரு லீற்றர், சிட்ரிக் அமிலம் 4 தேக்கரண்டி, எசன்ஸ் 4 தேக்கரண்டி, பொட்டாசியம் மெட்டாபைசலபேட் அரை தேக்கரண்டி.

**செய்முறை -** மாம்பழத்தைச் தோல் சீவி சிறிய துண்டுகளாக வெட்டி, கொஞ்சம் தண்ணீர் விட்டு அரைத்துச் சாறு எடுக்கவும். இதனை சூடுபடுத்தக்கூடாது. சீனிப்பாகு தயாரிதது பழச்சாற்றில் கலக்கவும். ஆறியவுடன் எசன்ஸ், பொட்டாசியம் மெட்டாபைசல்பேட் கலந்து போத்தலில் நிரப்பவும்.

### அன்னாசிப்பழரசம்

**தேவையான பொருட்கள் -** ஒரு லீற்றர் பழரசம் எடுக்கத் தேவையான பழங்கள் (ஒரு கிலோவுக்கு முக்கால் லீற்றர் கிடைக்கும்) சீனி இரண்டு கிலோ கிராம், தண்ணீர் ஒரு லீற்றர், சிட்ரிக் அமிலம் 5 தேக்கரண்டி, அன்னாசி எசன்ஸ் 4 தேக்கரண்டி, பொட்டாசியம் மெட்டாபைசல்பேட் முக்கால் தேக்கரண்டி.

**செய்முறை -** அன்னாசிப் பழத்தை தோல் சீவி, சிறிய துண்டுகளாக வெட்டி, சிறிது தண்ணீர் விட்டு அரைத்து ஒரு லீற்றர் சாறு எடுத்துக் கொள்ளவும். இதன் கரகரப்புப் போக இலேசாக சூடுபடுத்திக் கொள்ளவும். சீனிப்பாகு தயாரித்து, வடிகட்டிப் பழச்சாற்றில் சேர்க்கவும். ஆறியதும் எசன்ஸ் பொட்டாசியம் மெட்டாபைசல்பேட் சேர்த்துப் போத்தலில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

நுகர்வோரின் ரசனை அறிந்து, நேரிடையாகத் தயாரித்து வழங்கப்படுவதால் இந்தத் தொழிலுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும். ✳

# போசாக்கும், மருத்துவகுணமும் கொண்ட கடுகு குடும்பத்தைச் சேர்ந்த முள்ளங்கி

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே சீனாவில் பயிரிடப்பட்டு, பின்பு எகிப்து, கிரேக்க நாடுகளுக்கு முள்ளங்கியின் பயன்பாடு வந்தது. மலையகப் பிரதேசங்களைப் போலவே தாழ்ந்த ஈரவலயப் பிரதேசங்களிலும் பயிரிடப்படக்கூடிய மரக்கறி வகையாக முள்ளங்கி காணப்படுகிறது. முள்ளங்கி கடுகுக் குடும்பத்தைச் சேர்ந்தது. அதனாலேயே இதன் தோற்பகுதியில் சிறிதளவு கடுகு எண்ணெய் உற்பத்தியாகிறது. வெள்ளை நிற நீளவகை முள்ளங்கிக்கு 'டைகான்' என்றும் பெயருண்டு. இந்தவகை முள்ளங்கிகள் ஆசிய நாடுகளில் பயிரிடப்படுகிறது. உலகம் முழுவதும் ராடிஷ் என்ற முள்ளங்கி பல வண்ணங்களிலும், வடிவங்களிலும் உற்பத்தியாகிறது.

முள்ளங்கி மருத்துவத் தன்மையும், போசாக்கும் நிறைந்த மரக்கறி ஆகும். 100 கிராம் முள்ளங்கியில் அடங்கியுள்ள போசாக்குகள் வருமாறு.

| | | |
|---|---|---|
| நீர்த்தன்மை | - 94.40% | |
| சி விட்டமின் | - 15.0 | மில்லி கிராம். |
| காபோவைதரேட் | - 3.40 | கிராம். |
| கல்சியம் | - 50 | மில்லி கிராம். |
| புரதம் | - 0.70 | கிராம். |
| பொஸ்பரஸ் | - 22 | மில்லி கிராம். |
| எண்ணெய் | - 0.10 | கிராம். |
| இரும்பு | - 0.4 | மில்லி கிராம். |
| ஏ விட்டமின் | - 5 | மில்லி கிராம். |
| பொட்டாசியம் | - 138 | மில்லி கிராம். |
| பி விட்டமின் | - 0.08 | மில்லி கிராம். |

எல்லாப் பிரதேசங்களிலும் பயிரிடக்கூடிய இந்த மரக்கறிக்கு, நீர் விநியோகம் சீராகக் கிடைப்பது முக்கியம். மண் ஆகக் குறைந்தது 1.8 அடி ஆழமாகவும், இலகுவானதாகவும் இருக்கவேண்டும். இறுக்கமான மண்ணில் முள்ளங்கி பயிரிடப்படும் பொழுது, கிழங்குகள் சிறிதாக அல்லது இரண்டாகப் பிரிந்த கிழங்குகள் முளைக்கலாம். முள்ளங்கி வளர்ச்சியடையும் காலகட்டத்தில் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாத்துக் கொண்டால், உயர்ந்த விளைச்சலைப் பெறமுடியும். தேவையான அளவு நீர் விநியோகம் கிடைத்தால் வருடம் முழுவதும் பயிரிடலாம்.

**கன்றுகளுக்கிடையிலான இடைவெளி.**



ஒரு ஹெக்ரேயர் நிலத்தில் பயிரிட 5 கிலோ கிராம் முள்ளங்கி விதைகள் தேவைப்படும்.

வரிசைகளுக்கு இடையில் 25-30 சென்ரிமீற்றர் இடைவெளியும், கன்றுகளுக்கிடையில் 10 சென்ரிமீற்றர் இடைவெளியும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

**பயிரிடல்**

30-40 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு மண்ணைப் புரட்டி, உயர்ந்த பாத்திகளைத் தயாரித்து, மேற்புறத்தை மட்டமாக்கி அமைத்துக் கொள்ளவேண்டும். அந்தப் பாத்திகளின் வரிசைகள் 25-30 சென்ரிமீற்றர் இடைவெளிகள் இருக்குமாறு தயாரித்து, காபனிக் உரத்தை மண்ணோடு சேர்த்துப் போடவேண்டும். கன்றுகளுக்கிடையில் 10 சென்ரிமீற்றர் இடைவெளி விட்டு, ஒரு இடத்தில் இரண்டு விதைகள் முளைக்க வைக்கவேண்டும். விதைகள் முளைத்து 1 - 2 வாரங்களின் பின்பு ஒரு இடத்தில் ஒரு கன்று இருக்குமாறு விட்டு, மற்றைய கன்றைப் பிடுங்கி விடவேண்டும்.

வரண்ட நிலமாக இருந்தால், முதல் 4-5 நாட்களுக்குத் தினந்தோறும் நீர் விநியோகம் செய்யவேண்டும். பின்பு 3-4 நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகிப்பது சிறந்ததாகும்.

மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக மென்மையான பொலித்தீன் உறை ஒன்றினால் பாத்தியைச் சுற்றி மறைத்துக் கொள்ளலாம்.

**களைகளை நீக்கல்**

விதைகளை முளைக்க வைத்து, 1 1/2 - 2 வாரத்தில் மேலதிக கன்றுகளைப் பிடுங்கும் சந்தர்ப்பத்தின்போது, களையை நீக்கி விடவேண்டும்.

### நோயும் தடுப்பு முறையும்

1. வேரகள் வீங்கும் நோய் - மண்ணில் **Ph** அளவு குறையும்போது இந்த நோய் ஏற்படும். இந்த நோய் ஏற்பட்ட செடிகளின் வளர்ச்சி குன்றிக் காணப்படும். இந்த வகையான செடிகளைப் பிடுங்கிப் பார்த்தால் அந்தச் செடிகளின் பிரதான வேர்கள் வீங்கி இருப்பதைக் காணலாம்.

### தடுப்பு முறை

❖நிலத்தில் களைகள், கடுகுக் கன்றுகள் இல்லாதபடி வைத்திருத்தல்.
❖தகுந்த பயிர் மாற்றுதல் முறை ஒன்றை மேற்கொள்ளல்.

2. இலைகளைச் சுருட்டும் மயிர்கொட்டி.

மயிர்கொட்டி, முள்ளங்கி கன்றாக இருக்கும் சந்தர்ப்பத்திலேயே இலைகளைச் சுருட்டி, அதற்குள் உயிர் வாழ்ந்து கிளையின் பகுதிகளை முழுமையாக உண்கின்றன.

இலைகளின் அடியில் மயிர்கொட்டியின் கழிவுகளைக் காணலாம். இது விரைவாக ஏனைய பயிர்களுக்கும் பரவும் என்பதால், ஆரம்பத்திலேயே தடுத்துக் கொள்ளவேண்டும். தகுந்த கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்தித் தடுத்துக் கொள்ளலாம்.

கிழங்குகள் நன்றாக வளர்ச்சியடைவதற்குக் கன்றுகளின் அடியில் மண்ணைச் சேர்க்கவேண்டும். டைகான் வகை முள்ளங்கியை 60 நாட்களின் பின்பும், ராடிஷ் வகை முள்ளங்கியை 45 நாட்களின் பின்பும் அதன் பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலைகள் பசுமையாகவும், முள்ளங்கியை லேசாக அழுத்தினால் கடினமாகவும் இருந்தால், அந்த முள்ளங்கி புதியது. ஆனால், அழுத்தும்போது அமுங்கிப் போனால் பழையது என்று அர்த்தம்.

-சசி சந்திரகாந்தன்-

# பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல்

எமது தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் பனை ஓலைப் பொருட்கள் காலம் காலமாகக் குடிசைக் கைத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பனை ஓலையில் இருந்து பாய், பெட்டி, வெங்காயக்கூடை, சுளகு, தொப்பி, நீத்துப்பெட்டி, இடியப்பத்தட்டு, வீட்டு அலங்காரப்பொருட்கள் போன்ற பல உற்பத்திகள் செய்யப்படுகின்றன.

இந்த உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு நிறைய உண்டு. தரமான உற்பத்திப் பொருட்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் இந்தப் பொருட்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துகின்றன. இந்தப் பொருட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இதுவரை உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லையாகையால், எவ்வளவு பனை ஓலைப் பொருட்களையும் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு.

பனை ஓலை, பனையின் இளம் குருத்தோலை (சார்வு) யிலிருந்து செய்யப்படும் பொருட்கள் அதிகம் விரும்பப்படுகின்றன. இதற்குத் தேவைப்படும் உபகரணங்கள், சத்தகம், சிறுகத்தி அல்லது ஓலை வாருவதற்கான சிறுபொறி.

கோயில் உற்சவ காலங்களில் இந்தப் பொருட்களுக்கான கிராக்க அதிகமாகும். புகையிலை பொதி செய்யப்படுவதற்கு பனை ஓலைப்பாய்கள் பயன்படுத்தப்படுவதனால், புகையிலையை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் காலங்களில் பாய்களுக்குக் கிராக்கி அதிகமாகும்.

வீட்டின் ஒரு சிறுபகுதியிலேயே இந்தத் தொழிலை மேற்கொள்ளலாம்.

# முல்லைத்தீவு முப்பது வீட்டுத் திட்ட மக்களுடனான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் பிரதேசத்தின் முப்பது வீட்டுத்திட்டத்தில் வசிப்போருக்கான, கலந்துரையாடலொன்று கடந்த திங்கள் காலை பாலிநக... கா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதற்கு முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் - இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளை அறிந்து அவர்களை மீளவும் குடியமர்த்துவது சம்பந்தமாகவும், நிரந்தரக் காணிகளில் வசிக்கும் மக்களுக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்கல், முப்பது வீட்டுத்திட்டங்களுக்குச் செல்லும் பாதையைப் புனரமைத்தல், சுகாதாரக் கல்வி, குடிநீர்ப் பிரச்சினை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் முல்லைத்தீவு மாவட்டப் பொதுநிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் ஜெரோன், முல்லை மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன், பாண்டியன்குளம் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் இணைப்பாளர் அமலன், பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேச நிர்வாகச் சேவைப் பொறுப்பாளர் அசோகன்,

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக வலயப் பணிப்பாளர் மு.மூர்த்தி, சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் க.சிவா, பாண்டியன்குளம் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கைமாறன் ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்கியதுடன், முப்பது வீட்டுத்திட்டத்தில் வாழும் மக்களையும் சந்தித்து உரையாடியுள்ளனர். (ர)





கிளிநொச்சி திருநெறிக் கழகம் நடத்திய சைவசமயம் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் உரையாற்றுவதைக் காணலாம்

### இராமநாதபுரம் - வட்டக்கச்சி ஊடாக

## கிளிநொச்சிக்குப் பஸ் சேவை நடத்துமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

இராமநாதபுரத்திலிருந்து வட்டக்கச்சியூடாக, கிளிநொச்சிக்கு பயணிகள் பஸ் சேவை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு - மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். காலைமுதல் மாலைவரை மணித்தியாலத்துக்கு ஒரு பஸ்ஸை, இந்தப் பாதையூடாகச் சேவையில் ஈடுபடுத்தினால், கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும், பயணிகளும் பெரிதும் பயனடைவார்கள்.

இப்போது, குறிப்பிட்ட நேரத்துக்குச் செல்லும் பஸ்ஸைத் தவறவிட்டால் அடுத்துவரும் பஸ்ஸிற்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால், மக்கள் தமது கருமங்களை அந்த நேரத்துக்கு முடிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

## புதுக்குடியிருப்பு - கிளிநொச்சியில் இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயமுற்றனர்!

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு வீதியில் வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள் ஒன்றும், சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேராக மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. சம்பவத்தில் புதுக்குடியிருப்பு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த க.ரஞ்சிதகுமார் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தார்.

இதேவேளை - கிளிநொச்சி ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் லொறி ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டி பலத்த சேதத்துக்குள்ளானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வட்டக்கச்சி விவசாயக் கண்காட்சி குறித்துக் கலந்துரையாடப்பட்டது

(வட்டக்கச்சி)

கண்டாவளைப் பிரதேச கமக்கார அமைப்புக்களுக்கான கலந்துரையாடல், புளியம்பொக்கணை கமநல சேவை மண்டபத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த பதினொரு கமக்கார அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதில் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை வட்டக்கச்சிப் பண்ணையில் நடைபெறவிருக்கும் விவசாயக் கண்காட்சி தொடர்பாகவும், பழமரச் செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கான உதவியைப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதுடன் மற்றும் பன்னவேலை உற்பத்தி தொடர்பாகவும், சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கண்டாவளைப் பிரதேசப் பொறுப்பாளர் மங்களேஸ் மற்றும் விஸ்வமடுப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திலகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





### முல்லைத்தீவு அஞ்சல் அதிபராக சிதம்பரநாதன் நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அஞ்சல் அதிபராகக் கடமையாற்றிய பி.இராமச்சந்திரன் வவுனியா அஞ்சல் அலுவலகப் பிரதம அஞ்சல் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்துக்கு முல்லைத்தீவு அஞ்சலகத்தில் உதவி அஞ்சல் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.சிதம்பரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## வவுனியாவில் நடைபெற்ற வீதி விபத்தில் ஊர்காவற்படையினர் உட்பட மூவர் காயம்

வவுனியாவில் இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், இரண்டு ஊர்காவற்படையினர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு - வவுனியா பூந்தோட்டம் பாடசாலைக்கு அண்மையில் முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளும் நேரெதிரே மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் கே.புஸ்பராசா (வயது 33) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டபோதும், அங்கு சிகிச்சை பலனளிக்காத காரணத்தால் உயிரிழந்தார். வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மற்றயவரின் நிலையும் கவலைக்கிடமாகவுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - வவுனியா மாமடு வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு ஊர்காவற்படையினர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## யுனிசெவ், வெண்புறா ஆதரவுடன் உருவங்கள் மாறலாம் வீதிநாடகம்

இராணுவம் வெளியேறிய பகுதிகளில் அவதானமின்றிச் செல்வதாலும், அங்கு அறிமுகமில்லாத பொருட்களைத் தொடுவதாலும் உங்கள் உருவங்கள் மாறலாம் என்ற விடயத்தை வலியுறுத்தும் வகையில் யுனிசெவ், வெண்புறா நிறுவனத்தின் அனுசரணையுடன்,

மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தின் விடுதலைக் கலைஞர்களால் ஆற்றுகைப்படுத்தப்படும் பொன்னாலைக் கண்ணதாசனின் உருவங்கள் மாறலாம் வீதி நாடகம் வன்னியின் பலபாகங்களிலும் ஆற்றுகைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்கள் - தமது இயல்பு வாழ்க்கைக்காகத் தம் சொந்த நிலங்களில் மீளக் குடியமர விரும்புவதோடு 'மீளக் குடியமர்ந்தாலே 25 ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவு' என்ற அரசாங்க அறிவித்தலால் நிர்ப்பந்திக்கப்பட்டு இராணுவம் வெளியேறிய பகுதிகளில் குடியமர்கின்றார்கள்.

அத்துடன், இவர்கள் தம் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண அங்கு முயல வேண்டியுள்ளதால் மென்மேலும் அந்தப் பகுதிக்குள் ஊடுருவ வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தினரால் அங்கு விதைக்கப்பட்ட மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகள் என்பன, இவர்களின் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றன. இந்த நிலைமைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டே இந்த வீதி நாடகம் - முல்லை மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஆற்றுகைப்படுத்தப்பட்டு இப்போது மன்னார் மாவட்டத்திலும் பரவலாக ஆற்றுகைப்படுத்தப்பட்டு வருகிறது. (ந)

### வட்டக்கச்சியில் விவசாயக் கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும் மாபெரும் விவசாயக் கண்காட்சி செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதிவரை வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் நடைபெறும்.

### லொறி - ஓட்டோ விபத்து

வவுனியாவில் இருந்து புதிதாக வாங்கிவரப்பட்ட ஓட்டோ ஒன்று, முன்னே சென்றுகொண்டிருந்த லொறியுடன் மோதி சேதத்துக்கு உள்ளானது.

இந்த வீதிவிபத்து நேற்றுமுன்தினம் 3.30 மணிக்கு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

## மாதர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

முள்ளியவளைப் பிரதேச மாதர்சங்கப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் - அண்மையில் முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் முள்ளியவளை அரசியற்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - மாதர் சங்கங்களின் செயற்பாடு, மாதர்களின் செயற்பாடு, நன்னடத்தை பற்றிய சிறப்புக் கருத்துரையை முல்லை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேழினி நிகழ்த்தினார். தொடர்ந்து பிரதேச மாதர் சங்கப் புதிய உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது.

முள்ளியவளைப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வைதேகி, முல்லை மாவட்ட மகளிர் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ரேணுகா, தண்ணீரூற்று வலயப் பொறுப்பாளர் தென்றல் மாறன் ஆகியோருடன் முள்ளியவளைப் பிரதேச மாதர்சங்க உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மாதர் சங்கங்களின் ஆய்வுப் பட்டறை

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைமாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நடைபெற்ற மாதர் சங்க ஆய்வுப் பட்டறையில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டது.

முன்னதாகப் பொதுச்சுடரைப் பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் சுதாமதி ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை அரசியற்துறைச் சேர்ந்த தமிழ்க்கவி ஏற்றினார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை முல்லை மாவட்ட ஆரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா, மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேழினி மற்றும் தமிழ்க்கவி, சுதாமதி ஆகியோர் நிகழ்த்தினர்.

## கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்பநிறுவனம், கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை மக்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

வன்னியில் 300 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இவ்வாறான கருத்தரங்குகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இந்த நடவடிக்கைகளால் 60 இடங்களில் வெடிக்காத நிலையில் இருந்த வெடிபொருட்கள் கிடைத்துள்ளன.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 215 தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தகவல்கள் யாவும் கண்ணிவெடியகற்றும் பிரிவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாட்டை விரைவுபடுத்தும் வகையில் பிராந்திய கண்ணிவெடி செயற்பாட்டுக் குழு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கௌ)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பாரபட்ச அணுகுமுறைகள்.

1996 ஆம் ஆண்டுப் பகுதியில், யாழ்.குடாநாடு முழுவதும் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் சுற்றிவளைக்கப்பட்ட பிரதேசமாகி, அங்கிருந்த மக்கள் அனைவரும் படையினரின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கியிருந்த அச்சமும், பீதியும் நிறைந்த இருண்ட காலச் சூழலில் காணாமற்போன அப்பாவித் தமிழ் மக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக, யாழ்ப்பாணம் உயர் நீதிமன்றத்துக்கு - கொழும்பு வெலிக்கடையில் இருந்து கொண்டு வரப்பட்ட அந்த பிரசித்திபெற்ற மரணதண்டனைக் குற்றவாளியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்ற இராணுவ நபர் யாழ்.சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தா என்பது தெரிந்தவிடயமே.

அவருக்காக வாதிட இராணுவத்தரப்பில் இருந்தோ, அரச தரப்பிலிருந்தோ, வேறு எவரின் தரப்பிலிருந்தோ வழக்கறிஞர் எவரும் நியமிக்கப்படவும் இல்லை. அவருக்காக வாதாட எவரும் முன்வரவுமில்லை.

தான் யாழ்ப்பாணத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது தனது உயிருக்கு ஆபத்தானது என்றும், தன்னை முன்னர் வைத்திருந்த வெலிக்கடைச் சிறைக்கே மாற்றிவிடுமாறும் கோரி அவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த ஆரம்பித்தார். உண்ணாவிரதத்தின இரண்டாம் நாள் அவரைச் சந்தித்துப்பேசிய அதிகாரிகள் அவருக்குச் சில உறுதிமொழிகளை அளித்தனர். அதனை அடுத்து அவர் தனது உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொண்டார்.

இதனை அடுத்து அவரை மீண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடாகியுள்ளது என அறிவிக்கப்பட்டதுடன், நேற்றைய தினம் அவர் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டது.

ஒரு மனிதனின் - அவன் மாபெரும் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டவனாக இருந்போதிலும் - அவன் தனது உயிருக்கு யாழ்.சிறையில் பாதுகாப்பு இல்லை என்று கூறி, தான் விரும்பும் சிறைக்கு மாற்றும்படி கோரி உண்ணாவிரதம் இருந்ததும் இரு நாட்களுள் விரைந்து செயற்பட்டு அவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்த அதிகாரிகளின் மனித நேய நடவடிக்கையை (!) பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால், கடந்த பல ஆண்டுகளாக இலங்கை அரசின் தமிழ் மக்களுக்கு எதிராகவென்றே உருவாக்கப்பட்ட கொடூரமானதும், மனித உரிமைகளையும் புறந்தள்ளி விட்டதுமான பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டம் போன்றவற்றின் கீழ் வெறுமனே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு குற்றப்பத்திரிகைகள் முறையான வகையில் தாக்கல் செய்யப்படாமலும், விசாரணைகள் நியாயமானதும், நீதியானதுமான வகையில் நடாத்தப்படாமலும் சிறையில் வாடும் அப்பாவித் தமிழ் மக்களின் அபயக்குரல் மட்டும் எந்த அரசின் காதிலும், எந்த அதிகாரியின் காதிலும் மனிதக் குரல்களாக விழுந்ததே கிடையாது. உண்மையில் இதுவரை காலத்தில் எந்தச் சிங்களக் கைதியின் உயிருக்கும் யாழ்.சிறைச்சாலை அச்சுறுத்தலாக இருந்தது கிடையாது.

1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்பே கைதாகி யாழ்.சிறையில் சிங்கள அதிகாரிகளால் நிர்வாணமாக அடைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி யின் மறக்கப்பட்ட தலைவர் றோகன விஜேவீரவுக்கு இரகசியமாக தனது துவாயை வழங்கி மானங்காத்தவர் ஒரு தமிழ்க் கைதிதான். அவரை மனித நேயத்துடன் பின்னர் நடத்தியதும் ஒரு தமிழ்ப் பொலிஸ் அதிகாரிதான். இது றோகன விஜேவீரவே யாழ்.முற்றவெளியில் வைத்து சிறையில் இருந்து விடுதலையானதும் ஆற்றிய உரையில் பகிரங்கமாக ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

ஆனால், தென்பகுதிச் சிறைகளில் தமிழ் அப்பாவிக் கைதிகளை எப்படியெல்லாம் மிருகத்தனமாக நடத்தினார்கள், சித்திரவதை செய்தார்கள், கொன்றார்கள், அவர்களின் உடல்களை இல்லாமலேயே அழித்தார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் ஏராளம்.

இவையாவும் பௌத்த தர்மத்தின் பேரால் சிங்கள இனவாதிகளின் தலைமையில் - அரச பயங்கரவாதத்தின் அனுசரணையுடன் அரங்கேற்றப்பட்ட மனிதகுல அடாவடித்தனங்களாகும்.

1983 யூலைக்கலவரம், சிறையில் தமிழ்க்கைதிகளை இலங்கையின் சிங்கள ஆட்சியாளரும், அவர்களின் காவலர்களும், மனித உணர்வேயற்ற இனவெறிக் காடையர்களும் நடத்தினார்கள் என்பதற்கு வரலாற்றுச் சாட்சியாகும். பிந்துனுவேவ படுகொலைகள் இந்தக் கலாசாரம் தொடரவே செய்தது. அதன் பின்னரும் இலங்கையின் அரசியலில் பயங்கரவாதத் தடைச்சட்டம் எத்தனை தமிழர்களின் உயிர்களைப் பலி வாங்கியது, ஊனமாக்கியது, உளவியல் பாதிப்புக்குள்ளாக்கியது.... என்பதற்கு ஆதாரம் கூறத் தொடங்கினால் அதுவே ஒரு சரித்திரமாகிவிடும்.

இன்றும்கூடத் தடுப்பு முகாம்களில் தமிழ்க்கைதிகள் தம்மை விசாரணை செய்யுங்கள், குற்றங்கண்டால் தண்டனை கொடுங்கள், இல்லையேல் விடுதலை செய்யுங்கள், இவற்றில் எதனையும் செய்ய மனமில்லை என்றால் - தங்களை தங்கள் பகுதியில் கொண்டு போய் சிறைவையுங்கள் என எத்தனை தடவை கெஞ்சியிருப்பார்கள்... உண்ணாவிரதம் இருந்திருப்பார்கள்...

எந்த அதிகாரியின் காதிலும், எந்த அரசின் காதிலும் தமிழ்க் கைதிகளின் நியாயம் கேட்கும் குரல் கருத்தில் எடுக்கப்பட்ட வரலாறேயில்லை....

அவர்களின் போராட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதே இல்லை....

அவர்களுக்கு சில வேளைகளில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதே கிடையாது.

காரணம்.... அவர்கள் ராஜபக்ஷ பரம்பரையினரல்ல.... சாதாரண அப்பாவித் தமிழர்கள் என்பதே ஆகும்.

ராஜபக்ஷ யாழ்.சிறையிலிருந்து நெடுமூச்சு விட்டிருக்கலாம்....

ஆனாலும் வெலிக்கடையிலும், களுத்துறையிலும் இன்னும் ஏனைய சிறைகளிலும் இருந்த அப்பாவித் தமிழ்க்கைதிகள் விடும் 'சுடுமூச்சு' ஆபத்தானது என்பதை வரலாறு உணர்த்தியே தீரும்.

## நாடும் நடப்பும்



செய்தி :- ஜே.வி.பியினரைச் சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு.

# விமல் வீரவன்சவின் குற்றச்சாட்டுக்கு எஸ்.பி.திஸநாயக்க கண்டனம்

வெளிநாட்டு உதவிகளைப் பெறுவோர் இறுதியில் தமது தேசியத்தையும், கலாசாரத்தையும் மறந்து விடுவதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச முன்வைத்த குற்றச்சாட்டுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க கண்டனம் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் கல்வி கற்றவர்களும், வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொள்பவர்களும் தமது தேசியத்தையும், கலாசாரத்தையும் மறந்து விடுவதாகவும், இவர்களாலேயே இலங்கைக்கு ஆபத்து ஏற்படுவதாகவும் அண்மையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு - வெளிநாட்டு உதவிகளுக்கு எதிராகவே அமைந்துள்ளதாக தெரிவித்த, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க - வெளிநாட்டு உதவிகள் மூலம் பயனடைவோர் தமது தேசியத்தையும், கலாசாரத்தையும் மறந்து விடுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

ரஷ்ய அரசினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் மேற்படிப்புக்கென, ரஷ்யாவுக்குச் சென்ற ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் றோகண விஜேவீரவும், ஜே.வி.பியின் கிளர்ச்சியின் பின்னர் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்று இன்னமும் இங்கிலாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து பணம் பெற்றுக்கொண்டிருக்கும் ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் தமது தேசியத்தையும், கலாசாரத்தையும் மறந்துவிட்டதை விமல் வீரவன்ச ஒப்புக்கொள்கின்றாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

வெளிநாடுகளில் இன்று கல்வி கற்பவர்களை அல்லது நாட்டின் அபிவிருத்திக்காக வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் எவரும் - தமது தேசியத்தையோ, கலாசாரத்தையோ என்றும் மறப்பதில்லை எனவும் தெரிவித்த அவர் - சீனா, வியட்னாம் ஆகிய கம்யூனிஸ நாடுகள் உலக வங்கியின் அங்கத்துவ நாடுகளாக இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

# அலுவலக புனரமைப்புக்கு 4 மில்லியன் நிதியுதவி

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் அலுவலகப் புனரமைப்புக்கு, நியாப் திட்டத்தின்கீழ் 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக அந்த அலுவலகத்தின் திட்டமிடல் அதிகாரி கே.மகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இது குறித்துத் தெரிவிக்கையில் - யாழ். உதவி அரச அதிபர் அலுவலகத்தின் பல பகுதிகள் திருத்தப்படாத நிலையில் உள்ளன. இதற்கான நிதிப்பற்றாக்குறை நிலவி வந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு, நியாப் நிறுவனம் 40 லட்சம் ரூபாவை எமது அலுவலகக் கட்டடத் திருத்தவேலைக்காக வழங்க முன்வந்துள்ளது. அடுத்த வாரமளவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

## யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால்

# வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கல் கிடைக்காதவர்கள் ஆட்சேபனை

நெடுந்தீவுப் பிரதேச பிரிவுக்குட்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினர் வீட்டுப் பாவனைப் பொருட்கள் அடங்கிய பொதிகளை நேற்றுக்காலை 11 மணிமுதல் மாலை 4 மணிவரை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கினர்.

விதவைகள், கைவிடப்பட்டோர், அங்கவீனர்கள், வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோர், மீள்குடியமர்ந்தோர் ஆகியவர்களுக்கே இந்த உதவிப்பொதி வழங்கப்பட்டன. இந்த உதவிப் பொருட்களைப் பெறத் தகுதியுடையோர்களின் விபரங்கள் யாவும், கிராம அலுவலர்கள் மூலம் யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோர் என்ற வகையில், தெரிவு செய்யப்பட்டவர்களில் பெரும் முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், கிராம அலுவலர்களின் இந்த நடவடிக்கையால் மிக வறுமை நிலையிலுள்ள குடும்பங்கள் - மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பெரும் திரளான பாதிக்கப்பட்ட மக்கள் இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்ட வேளையில், உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சென்று ஆட்சேபம் தெரிவித்ததுடன், கிராம அலுவலர்களுடன் வாய்த்தர்க்கம் புரியுமளவுக்கும் நிலைமை மோசமடைந்தது.

இந்தநிலையில், உதவி அரசாங்க அதிபரும், யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அதிகாரிகளும் - மக்களுக்கு ஆறுதல்கூறி, அடுத்த பட்டியலில் அவர்களுக்கான உதவிப் பொருட்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர்.

# வலி.கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் குடும்ப பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

(வலிகாமம்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள, சகல கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள குடும்பங்களின் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளது.

இந்த மீளாய்வின்போது குடும்பத்தலைவர் தமது பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் தத்தமது கிராம அலுவலகத்துக்கு காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை சமூகம் கொடுக்குமாறு வலி.கிழக்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய் மேற்கு, புத்தூர் வடக்கு ஆகிய பிரிவுகளிலும் -

நாளை உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் கிழக்கு, ஊரெழு, நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, ஆவரங்கால் மேற்கு ஆகிய பிரிவுகளிலும் -

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை சிறுப்பட்டிகிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு, நவக்கிரி, ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் கிழக்கு, அச்செழு, பத்தைமேனி ஆகிய பிரிவுகளிலும் -

மறுநாள் செவ்வாய்க்கிழமை வாதரவத்தை, கம்பர்மலை, கதிரிப்பாய், இடைக்காடு, வளலாய், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு ஆகிய பிரிவுகளிலும் மீளாய்வுப் பணிகள் இடம்பெறும்.

# முன்னாள் அமைச்சர் அப்துல் காதரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல் காதரை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மக்களின் பணத்தை முறையற்ற விதத்தில் கையாண்டமை தொடர்பாக முன்னாள் அமைச்சர் அப்துல் காதர் கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

அதன் பின்னர் கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தனவின் வீட்டில் வைத்து அவர் ஆஜர் செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸ் தலைமையகத்தின் ஊழல் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் கைது செய்யப்பட்டமை தொடர்பாகத் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



**மாமனிதரின் 66 ஆவது பிறந்த நாள் நினைவாக...** **சிவானந்த மூர்த்தி**

# தன்மானச் சிந்தனையை ஊக்குவிக்கும் மாமனிதன் குறித்த அறிகைகள்



உலகெங்கும் வாழும் தமிழர் வரலாற்றில் வாழ்வில் இன்றைய தினம் முக்கியமானதோர் தினமாகும். இன்று மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 66 ஆவது பிறந்த தினம் அன்னாரின் பிறப்பினால தமிழினம் பெற்ற பெருமையை பேசிப் பரமிப்படைய வேண்டிய இந்த இனிய நாளில் பிரிவுத்துயரைப் பகிர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் தமிழினம்.

சாவில்லாச் சாவடைந்த, தமிழ் மறவனின் ஜனனத்தை, வாழ்வை மரணத்தை ஏன்? தமிழ் பேசும் இனம் நினைவுபடுத்த வேண்டும். மனதிருத்தவேண்டும். இந்த மனிதனின் வரலாறு ஏன் ஈழத்தமிழர் வரலாற்றில் பொறிக்கப்படவேண்டும்? தமிழ் பேசும் மாணவர்களது வரலாற்றுப் பாடவிதானத்தில் சேர்க்கப்பட வேண்டும். கல்லூரிகளில் கட்டாயமாகப் படிப்பிக்கப்பட வேண்டும் ஏன்?

அரசியல்சார் குடும்ப வழித் தோன்றல், வளம்மிகக குடும்பத்தின் வாரிசு, துணைகளில்லாத போதும் தமிழரின் மூத்த அரசியற் கட்சிக்குத் தூணாக நின்று வழி நடத்தியமைக்காகவா? மதிநுட்பம் வாய்ந்த சட்ட வல்லுநர், குறிப்பாக குற்றவியல் சட்டங்களில் துறை போந்தவர், அரசியல் சார்பாய் நசுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட இன மக்களுக்காக வாதாடியவர். கடல் கடந்து, வாழ் தமிழ் மக்களின் நலனுக்காக வாதாடியவர் என்பதற்காகவா, அரசியல் சாணக்கியம், அரசியல் நாகரீகம், அரசியலிலும் நேர்மை, அரசியல் தீர்க்க தரிசனம், தற்துணிவு, தளராத மனப்பாங்கு, மனோபலம், கொண்டவர் என்பதற்காகவா? தமிழ்பேசும் இனம் அமரரை அவரது கட்சியை தேர்தல் ரீதியாகப் புறக்கணித்து 'வெறும் வாயச் சொல்வீரர்களை' அரியாசனம் ஏற்றியதையும் மன்னித்து, மறந்து, அவர்களது விடியலுக்காக தன் இன்னுயிரையும் ஈர்ந்தவர் என்பதற்காகவா?

தமிழ் பேசும் இனம் தனது அரசியல் சுதந்திரத்தையும், சுயநிர்ணயத்தையும், சுயாதிபத்தியத்தினையும்தாமே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். சாத்வீகம் சார் முறைமைகளினால் அவைகளைப் பெறமுடியாது போராடித்தான் பெறவேண்டும் என்கிற கோஷத்துடன் தன் குரலையும் சங்கமிக்கச் செய்தவர் என்கிற கோதா விற்காகவா? தியாகவிதைப்பிலே தான் விளைவும், விடிவும் கிடைக்கும் என்பதற்காகவா? 'ஆதர்சபுருஷரை' நினைவுகூருவதில் காட்டிடும் ஆதங்கம், எதிர்காலத்தில் ஆதர்சபுருஷர்கள் உருவாகும் நிலையை உருவாக்கும் என்பதற்காகவா, மேலே கூறப்பட்ட அனைத்திற்கும் உறைவிடமாய் உருவாய், உயிர்ப்பாய் விளங்கி, தலைநகரிலே தன்னந்தனியே பேரினவாதிகளுக்கு எதிராய் தனிக்குரலாய் நின்று சிம்ம சொற்பனமாய் திகழ்ந்து விடியலுக்கு விளக்காய் தன்னையே தமிழினத்திற்காய் மாயத்த மாமனிதரை தமிழ் பேசும் இனம் நினைத்திருக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டது.

'நான் சுய மரியாதையுள்ள தமிழனாகவே தமிழனாகவே வாழ விரும்புகிறேன. நான் ஒரு அடிமையாக வாழ்ந்து இனத்துவேசிகளும், ஆட்சியிலுள்ளவர்களும் கூறுபவைகளுக்குத் தலையாட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அவர்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாவிடில், அவர்கள் கூறுவது எனது நம்பிக்கைக்கு எதிராக அமைந்தால் நான் ஏன் எனது மனசாட்சிக்கு எதிராக நடந்து மௌனம் சாதிக்க வேண்டும்.'

குமார் பொன்னம்பலம்

வருங்கால சந்ததிக்கும் இந்த மாமனிதரின் வரலாற்றை சரியானபடி சொல்லி வைக்க வேண்டிய தாராண்மியமும், தமிழினத்துக்குண்டு. மாமனிதர் குறித்த அறிகைகள் தமிழனின் தன்மானச் சிந்தனையை ஊக்குவிக்கும் உயர்த்தும் தற்துணியை மேம்படுத்தி தமிழன் என்று சொல்லி தலைநிமிர்ந்து வாழ வழி செய்யும்.

அமரரின் பங்களிப்புக்களை ஒவ்வொன்றாய் ஆய்வு செய்தல் பலாபலன்களை பெருமளவில் நல்கும் எனினும் சமகாலச் சூழலுக்கு முதன்மையானவை எனக்கண்டு கொண்ட சிலதை மீளநோக்குதல் பொருத்தமாய் அமையும். அமரரின் தற்துணிவு, அஞ்சாமை, அரசியல், சாணக்கியம், எதிர்காலம் பற்றி எதிர்வு கூறல்கள், வாதிடும் வல்லமை, குறிதத சில நிகழ்வுகளை நினைவுக்காய் மீட்டல் இந்தக் கட்டுரையின் நோக்காகிறது.

மனித வலுவுக்கும் மேலாய், இறைசித்தத்தில் அசைக்க முடியாத ஏன் பிடிவாதமான நம்பிக்கை கொண்டவர். அமரர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'... என்பதே அமரரின் தாரகமந்திரமாகும். கொண்ட கொள்கைகளில் தளர்வற்ற தற்துணிவுமிக்க பிடிப்பினைக் காட்டிக் கொள்வதனால் அரசியல்வாதியும் ஆன்மீகவாதியும், ஒருவர போன்றே ஆகின்றார்கள். வரித்துக் கொண்ட தனது கொள்கை கோட்பாடுகளுக்கெதிராக, பயமுறுத்தல்கள், மிரட்டல்கள் எத்தனை எத்தனையோ பேரினவாதிகளிடமிருந்து வந்தபோதும் அதனை எதிர்கொண்டு ஓர் ஆன்மீகவாதிக் குரிய மனப்பாங்குடன் அதாவது, துறவுள்ளத்துடன் தலைபணிய மறுத்தார். 'மூசுவண்டறை பொய்கையும் போன்றதே' என்கிற நிலைப்பாட்டை நெஞ்சிருத்திக் கொண்டார். கொள்கை வயப்பட்ட போராளியொருவருக்குரிய நிலையிது என்றும் கருதலாம். உள்ளுணர்வு உயிர்ப்பயத்தை உணர்த்திய போதும் கவனத்திற் கொள்ளாத தளர்வுறாநிலையைப் பேணிக் கொண்டார்.

எனது உயிருக்கு எப்போதோ குறிவைக்கப்பட்டு விட்டது..., இரண்டாயிரம் ஆண்டு முடிவடையும் வரை என்னை உயிருடன் விட்டுவைப் பார்களோ, சந்திரிக்கா அரசு எனது இரத்தத்திற்காகக் காத்திருக்கிறது... இவ்வாறான உள்ளுணர்வு உணர்த்தல்களை பகிரங்கமாகக் கூறிக் கொண்டவராகவே, மரணிக்க மூன்று நாட்களுககு முன்னர் நாளிதழொன்றிற்கு வழங்கிய செவ்வியில் இந்த நாட்டின் அதி உயர் அரசியல் அதிகாரத்திற்கு எதிரான கருத்துக்களை [illegible]காரசாரமாகவும், வெளிப்படையாகவும், வழங்கினார். இத்தகைய துணிவுமிக்க மாமனிதர் வரித்துக் கொண்ட இலட்சியத்திற்காகவே வாழ்ந்து, தமிழினத்தின் இலட்சிய புருஷரானார்.

அராஜகத்திற்கும், அநியாயத்திற்கும் எதிராக எந்த நிலையிலும் போர்தொடுத்தார். மனித உரிமைகளைக்காக்க இவர் போராடியது போனறு யாருமே சமகாலத்தில் போராடியதில்லை எனத்துணிந்து குறிப்பிடலாம். இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமைமீறல்களை சர்வதேச அரங்குகளில் குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைககுழு முன்னும் (1997, 1999 ஜெனீவா உரை) ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னும் (1998 பெல்ஜியம் உரை) உரையாற்றினார்.

செம்மணியில் நடந்த படுகொலைகளும், புதுக்குடியிருப்பில் மக்கள் குடியிருப்பின் மேலாய் நடந்த விமானக்குண்டு வீச்சுக்களும், கொக்கட்டிச் சோலையில் நடந்த மனிதப் படுகொலைகளும், மன்னார் தேவாலயத்தில் நடாத்தப்பட்ட குண்டு வீச்சுக்களும் இந்த உரைகளில் கோர்வையிட்டும் காட்டப்பட்டது. இலங்கையில் நடைபெறும் அராஜகத்தை உலகம் அறிந்தது. தூதராலயங்கள் அராஜக அரசின் கொடுமைகளை குமார் வழியாகச் சேகரித்துக் கொண்டன. ஈழத்தமிழர் பிரச்சினை புதிய பரிணாமத்தை அடைந்தது.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்கள் முன் தாயக மககளின் அடிமை வாழ்வின் கோரம் எடுத்துச் சொல்லப்பட்டு, அடிமைத்தளையறுக்க அவர்கள் ஆற்றவேண்டிய பங்களிப்புக்கள் குறித்து குமாரால் எடுத்துச் சொல்லப்பட்டது. தமிழ்பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதியாக விளங்கக்கூடிய தாரண்மியமும், தார்மீக வருமமும் கொண்டவர்கள். விடுதலைப் புலிகளே, அவர்களால் தான் தமிழர் வாழ்வுவிடிவு பெறும். தமிழர் தாயகம் உருவாகும் எனப்பட்டவர்த்தனமாக பாரெல்லாம் சென்று முழங்கியவர் மாமனிதரே.

மாறி மாறி ஆட்சிக்குவந்த அராஜக அரசுகள் பயங்கரவாதச் சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் பயன்படுத்தி வகை தொகையில்லாமல் தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் ஆர்வலர்களையும் சிறையிலும், தடுப்புக்காவல் முகாம்களிலும் அடைத்துச் சித்திரவதை செய்த போது நீதித்துறை வல்லுணர்களை நிறையவே கொண்டிருந்த தமிழ் பேசும் இனத்திலிருந்து குரல் கொடுக்க எவரும் முன்வரவில்லை. கண்டும் காணாதது போல் இருந்து விட்டார்கள். தாமுண்டு தம் குடும்பமுண்டு என்கிற குறுகிய வட்டத்துக்குள் வாழ்வை வளைத்துக் கொண்டார்கள் இந்த நிலையில் இவர்கள் சார்பாக வேதனமின்றி ஆஜராகி பலரைச்சிறைமீட்ட பெருமை மாமனிதரைச் சாரும். இலங்கைச் சட்டமா அதிபர் அலுவலகச் செய்திக குறிப்பொன்றின் பிரகாரம் எண்பது வீதமான வழக்குகளில் குமார் பொன்னம்பலம் அவர்களே ஆஜரானார் என்பதையும் உறுதிப் படுததுகிறது. யாவற்றிற்கும் மேலாய அமரர் மருணித்தபோது சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளின் குமுறல், கதறல், கண்ணீர் அவர்களது அநாதரவான நிலையையும், குமாரின் சேவையையும், தேவையையும் உணர்த்துகிறது.

தமிழ்த்தேசியத்தை, தமிழர் தாயகக்கோட்பாட்டை, தன்னாட்சி உரிமையை, சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தவாறாய் வரும் அரசாங்கத்தோடு தான் தமிழினம் பேச்சுவார்த்தை நடாத்தும் தமிழர் பிரச்சினை விடுதலைப்புலிகளுடன் பேசித தான் தீர்வு காணப்படவேண்டும் என்கின்ற அமரரின் தீர்க்கதரிசன கருத்துக்கள் இன்று அனைத்துத் தரப்புக்களாலும் அங்கீகரிக்கப்படவேண்டியதொன்று என்ற குரல் ஓங்குகிற போது அமரரின் குரலும் அங்கு ஒலிக்கின்றது குமாரின் குரல ஓயவில்லை.

'எமது காலத்தில் வாழ்ந்த மாட்டின லூதர்கிங்' என சாள்ஸ் கிறேபஸ் (Chares Graves) அமரரைப் பாராட்டியதை நினைவிருத்தி மாமனிதர் காலத்தில் வாழ்கிறோம் என்கிற பெருமிதத்துடன் அவர்களது அரசியல் அபிலாசைகள் நிறைவுபெற தொடர்ந்தும் ஒருமுகமாய் செயல் படுவோமாக.

---

**சாதனை மனிதன்...**

# பார்வை இழந்த போதிலும் சாதிக்கத் துடிக்கும் மனிதம்



ஸ்டீவ் கனிங்க்ஹம்

இரு கண்களும் தெரியாத குருட்டு விமான ஓட்டி ஒருவர் பிரீத்தானியாவைச் சுற்றி விமானத்தை செலுத்தி உலக சாதனை ஒன்றை நிலை நிறுத்துவதற்கு இந்த நாட்களில் முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றார். 41 வயதான இந்த புதுமையான விமான ஓட்டியின் பெயர் ஸ்டீவ் கனிங்க்ஹம், 5 நாட்களுக்கான இந்த வரலாற்றுப் பயணத்தின் பொருட்டு அவர் கடந்த நாட்களில் பிரித்தானியாவின் கென்ட் பிராந்தியத்தில் பிஹின் ஹில் விமானநிலையத்தில் இருந்து புறப்பட்டார்.

ஸ்டீவின் தனிமைக்கு மேலதிகமாக ஒரு விமான ஓட்டி விமானத்தில் பயணம் செய்தாலும் விமானத்தை முழுவதுமாகவே நிர்வகித்துச் சென்றது ஸ்டீவ் தான்.

ஸ்டீவ் கனிங்க்ஹம்மின் இரு கண்களும் பார்வையிழந்து போனது அவர் 12 வயது சிறுவனாக இருந்த பொழுதே.

"12 வயதளவில் இரு கண்களுமே இல்லாமற் போனது இல குவான ஒரு விடயம் அல்ல" ஸ்டீவ் கூறுகின்றார். "எனக்கு என்னுடைய மாற்றம் நிகழ்ந்தது தீய நிமித்தங்களினால் என்பதை எனக்கு நிருபிக்க முடிந்தது".

"எனக்கு என்னுடைய மாற்றம் நிகழ்ந்தது தீய நிமித்தங்களினால் என்பதை எனக்கு நிருபிக்க முடிந்தது". 'நான் நினைக்கிறேன் எனது இருகண்களிலும் பார்வை இல்லாமற்போய் விட்டிருக்காவிட்டால் என்னுடைய வாழ்க்கை இந்த அளவுக்கு பயனுள்ளதாக ஆகியிருக்காது' என்று

இந்தப் புதுமையான மனிதம் மேலும் குறிப்பிட்டிருந்தார். நான் நினைக்கிறேன் எனது இருகண்களிலும் பார்வை இல்லாமற் போய் விட்டிருக்காவிட்டால் என்னுடைய வாழ்க்கை இந்த அளவுக்கு பயனுள்ளதாக ஆகியிருக்காது என்று

ஸடீவ் ஹனிங்ஹம் இப்படிச் சொல்வதற்குச் காரணம் இல்லாமல் இல்லை. 1999இல் மணித்தியாலத்திற்கு 147 மைல் வேகத்தில் கிறிஸ்லர் டொஜ்வயிபர் இன மோடடார் வாகனத்தினை செலுத்தி அவர் உலகின் வேகமான குருட்டு மோட்டார் ஓட்டி எனதன்னை நிலை நிறுத்திக் கொண்டார். அது மாத்திர மல்ல 2000ஆம் ஆண்டில் ஆங்கிலக் கால்வாயினூடாக அதி வேகம் கூடிய படகினைச் செலுத்திச் சென்று வேகம் பற்றி மேலும் ஒரு சாதனையை நிலை நிறுத்தினார்.

தனது வாழ்க்கை மிகவும் பயனுள்ளதானது கண்கள் இரண்டும்



குருடாகிப் போய்விட்ட பின்பே என்று இவரது கதைக்கு அர்த்தம் கிடைப்பது இதோ இந்தப் பின்னியில் இருந்தான்.

க்லு கொமா என்னும் நோய்க்கு இரையாகிப் போய் ஸ்டீவ்வினுடைய இரு விழிகளிலும் பிரச்சனை உண்டாவதற்கு ஆரம்பித்தது. அவனுக்கு எட்டு வயதாக இருக்கும் பொழுதுதான் அதற்குப் பிறகு அவர் 4 வருடங்களுக்குள்ளாகவே முழுமையாகவே குருடாகிப் போவதற்கு நேர்ந் தது. பிரித்தானியாவைச் சுற்றி விமானத்தினைச் செலுத்தி உலக சாதனையை நிலைநிறுத்துவதற்கு ஆயத்தமாகும் ஸ்டீவ இங்கிலாந்தின் கண்பார்வை இழந்தவர்களின் காற்பந்தாட்டக்குழுவின் தலைமைப் பதவியையும் வகிக்கின்றார்.

நன்றி

சமதுர்
தமிழில் வல்லையூரான்

# நஜாவ் நகரில் அமெரிக்கப் படையினர் தொடர்ந்தும் கடும் தாக்குதல்கள்!



நஜாவ் நகரத்தில் உள்ள சதார் ஆதரவுப்படைகளின் நிலைகள் மீது அமெரிக்கப்படையினர் கடும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

சதார் ஆதரவுப்படைகள் நிலைகொண்டிருந்த சவக்காலையின் மீது அமெரிக்கத் துருப்பினர், விமானப்படை ஆட்லறி மற்றும் டாங்கிகளின் உதவியுடன் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலை அடுத்து சவக்காலை அமைந்திருந்த பகுதியில் இருந்து பாரிய புகைமூட்டங்கள் மேற்கிளம்பியதாக நேரிற் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் நஜாவ் நகரத்தின் மத்தியில் உள்ள பொதுமக்களை நகரினை விட்டுவெளியேறும்படி நஜாவ் நகர ஆணையாளர் கேட்டுள்ளார். அத்துடன், நஜாவ் நகரத்தில் உள்ள பொதுமக்கள் நகரத்தில் இருந்து வெளியேறும்படி அரபு மொழியில் ஒலிபெருக்கி ஊடாக அமெரிக்க இராணுவமும் அறிவிததுள்ளது.

நஜாவ் நகரத் தாக்குதலால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக, நகர பொதுவைத்தியசாலையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்தபோதும் அது கைகூடவில்லையென ஈராக்கில் உள்ள செம்பிறைச் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பி.பிஸிக்கு கருத்துத்தெரிவித்த ஜோர்தானில் உள்ள ஈராக்கிய இடைக்கால அரசின் பேச்சாளர் -

நஜாவ் நகரத்தில் இருந்து சரியான தகவல்களைப் பெறமுடியாது இருப்பதாகவும், நகரத்தின் செயற்பாடுகள் முழுமையாக முடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாக்தாத்தில் உள்ள பி.பி.ஸி செய்தியாளர் இத்தாக்குதற் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்- ஈராக்கிய இடைக்கால அரசு பதவியேற்ற பின்னர் எதிர்கொண்டுள்ள மிகப் பெரிய சோதனை இது எனத் தெரிவித்தார். நஜாவ் நகரத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான இழப்புகள் இதுவரை வெளிவரவில்லை.

இதேநேரம் தனது கடைசித்துளி இரத்தம் மண்ணில் சிந்தும்வரை அமெரிக்கப்படைகளுக்கு எதிரான போர் தொடரும் என கடந்த திங்கட்கிழமை சதார் அறிவித்ததன் பின்னர், அமெரிக்கப் படைகள் இந்தப் பாரிய தாக்குதலை நடத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், இந்தச் சம்பவமானது ஈராக்கின் நிலையான, பலமான அரசியல் சூழல் இன்மையை வெளிக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

# மீனவர்களின் சுதந்திர தொழிலுக்கு கச்சதீவை இந்தியா மீட்க வேண்டும்

## இல.கணேசன் வலியுறுத்தல்

கச்சதீவை மீட்கவேண்டும் என்று இல.கணேசன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

இராமநாதபுரம் மாவட்டம் முருங்கையாடிக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ராமு, கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி. அதிர்ச்சி தருகிறது. இலங்கை அரசின் இத்தகைய போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இராமேஸ்வரம் கடற்பகுதியில் மீனவர்கள் தங்கள் தொழிலை முறையாக நடத்துவதற்கு இலங்கை அரசு தொடர்ந்தும் இடையூறு செய்து வருகிறது. இந்தியப் பிரஜை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட விடயம் அசாதாரணமான விடயம் என்றும், இந்திய தேசத்துக்கு சவால் விடுக்கும் போக்கு என்றும் கருதி, மத்திய அரசு இது குறித்து கடும் கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் கச்சதீவு மீது நமக்கு உள்ள உரிமையை விட்டுக்கொடுத்ததுதான். அப்போதும் அந்தப்பகுதிக் கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை உண்டு என ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் அந்த உரிமை வலியுறுத்தப்படவில்லை.

இதற்கு நிரந்தரத்தீர்வு - மீண்டும் கச்சதீவை மீட்கவேண்டும். அதுவரை அந்தக் கடற்பகுதி இந்திய-இலங்கை மீனவர்களுக்கு மீன்பிடிக்கும் பொதுப்பகுதி என அறிவிக்க வேண்டும்.

இந்திய மீனவர்களுக்கு உரிமம் வழங்கப்படல் வேண்டும். இரவு நேரத்திலும் ஒளிவிடும் அடையாளம் படகில் பொருத்தப்படல்வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய படுகொலை நடைபெறுவதைத் தடுக்க மத்திய அரசு விரைந்து செயற்படவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# துருக்கி இஸ்தான்புல் தாக்குதலுக்கு இஸ்லாமிய அமைப்பு உரிமைகோரல்

துருக்கியின் நகரான இஸ்தான்புல்லில் அமைந்த இரண்டு ஹோட்டல்கள் மற்றும் காஸ் தொழிற்சாலைக்கு வெளியே நடந்த குண்டுவெடிப்புக்கள் என்பவற்றுக்கு குர்திஷ் இஸ்லாமியக் குழுவொன்று உரிமைகோரியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தக் குண்டுவெடிப்புக்களில் இருவர் கொல்லப்பட்டும், 11 பேர் காயமடைந்தும் இருந்தனர். கொல்லப்பட்டவர்கள் ஈரான் மற்றும் துருக்கி நாட்டுச் சாரதிகளாவர். காயமடைந்தவர்கள் சீனா, டென்மார்க், உக்ரெய்ன மற்றும் துர்க்மெனிஸ்தான் பிரஜைகளாவர்.

முன்னர் நன்கு அறியப்படாத குர்திஷ் குழுவான - குர்திஷ்தான் சுதந்திர முன்னணி என்ற இஸ்லாமிய அமைப்பே இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

அண்மையில் துருக்கிப் படையினர் குர்திஷ் கிளர்ச்சிவாதிகளுக்கு எதிராக நடத்திய இராணுவ நடவடிக்கைக்கெதிராகவே இந்தத் தாக்குதலை தாம் நடத்தியதாக, நன்கு அறியப்படாத குர்திஷ் அமைப்பொன்று தமக்கு தொலைபேசியூடாகத் தெரிவித்ததாக ஜேர்மன் செய்தி நிறுவனம் தெரிவித்தது.



ஆனாலும் குர்திஷ் பிரிவினைவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமெரிக்க பாதுகாப்புச் செயலர்

# ஆப்கான் தலைநகர் காபூலுக்கு நேற்று விஜயம் செய்தார்!

(காபூல்)

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் - ஆச்சரியம் அளிக்கும் வகையில் காபூலுக்கு நேற்று விஜயம் செய்தார்.

இவ்வாறு சென்ற அவர் - ஒக்டோபர் மாதம் ஆப்கானில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அங்குள்ள முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

ஆப்கானுக்குச் செல்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கருத்துத் தெரிவித்த ரம்ஸ்பீல்ட் -

ஆப்கானில் உற்பத்திசெய்யப்படும் போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கு ஆப்கான் அரசாங்கமும், அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளும் இணைந்து புதிய திட்டமொன்றை வகுத்துள்ளனர். அத்துடன், ஆப்கானிலுள்ள போதைப்பொருள் உற்பத்தியால் ஆப்கானின் ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது



எனத் தெரிவித்தார்.

ஆனாலும், போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவது குறித்த புதிய திட்டத்தின்படி, அமெரிக்கப் படையினரின் ஈடுபாடு தொடர்பாக ரம்ஸ்பீல்ட் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, ஆப்கான் சென்றுள்ள ரம்ஸ்பீல்ட் - ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் மொகமட் பாகீம் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதிகளுடன் அவர்கள் அல்கொய்டா மற்றும் தலிபான் கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக ரம்ஸ்பீல்ட் கலந்துரையாடவுள்ளார்.




# இஸ்ரேல் ஹெலிகளின் தாக்குதலில் 14 பலஸ்தீனப் பொதுமக்கள் காயம்

## காஸா நகரில் சம்பவம்

(டெல்அவில்)

பலஸ்தீன காஸா நகரத்தில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 14 பலஸ்தீனர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் நான்கு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸா நகரத்தில் அமைந்துள்ள மிகவும் பிரபல்யமான ஹான யுனிஸ் அகதிமுகாமிற்கு அருகிலுள்ள வீதியில் குழுமிநின்ற பொதுமக்கள் மீதே இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் பலஸ்தீனப் போராளிகளும், பொதுமக்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் இராணுவம் -

இந்தத் தாக்குதல், பலஸ்தீனப் போராளிகளை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தது.

இதேசமயம், நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஹான் யுனிஸ் முகாம் அமைந்துள்ள எல்லைப் பகுதியூடாக முன்னேறிய இஸ்ரேலிய இராணுவ டாங்கிகளை எதிர்த்து, பலஸ்தீனப் போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும், பலஸ்தீனப் போராளிகளின் தாக்குதல்களை முறியடித்து முன்னேறிய இஸ்ரேலிய இராணுவ டாங்கிகளின் தாக்குதல்களில் அப்பகுதியிலுள்ள பல கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் - பலஸ்தீனப் போராளிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே இஸ்ரேலிய இராணுவ டாங்கிகள், ஹான் யுனிஸ் அகதி முகாம் அமைந்துள்ள பகுதியினுள் நுழைந்ததாகவும், அழிக்கப்பட்டவை அனைத்தும் பலஸ்தீனப் போராளிகளால் கைவிடப்பட்ட வீடுகளே எனவும் தெரிவித்தார்.


இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



ரமேஷ்குமார் தாரணி (ஜிக்கி) தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

ராஜ்கரன்

தனது இரண்டாவது
பிறந்த தினத்தை இந்தியாவில்
லக்கிகவுஸ், ஜெய்நகர்,
கருமண்டபம் திருச்சி என்னும்
விலாசத்தில் இன்று வெகு
விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை பேரன்மாரான திரு.திருமதி கோவிந்தராஜன்
(இந்தியா), திரு.திருமதி பாஸ்கரன் (கம்போடியா),
ஆகியோரும் மாமா லக்கி (கஜன் - லண்டன்), இந்தியாவிலுள்ள
பெரியப்பாமார், அத்தைமார், பூட்டிதிருமதி மாரிமுத்து
தில்லையம்பலம் (இலங்கை), ஆகியோரும் சீரும் சிறப்பும் பெற்று
பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
பேரன், பேத்தி, மாமா

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜப்பானிய தூதர் அக்கியோ சூடா தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்!

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா எதிர்வரும் சனிக்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் பிரித்தானிய தமிழ் அகதிகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் தவத்துரை ஜெயரஞ்சன் சந்தித்து பிரித்தானிய தமிழ் அகதிகள் விவகாரம் குறித்து கலந்துரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - லண்டனில் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவலநிலை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்து இவர் முறையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரு விடுதலைப் புலிகள் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு - மாவடிவேம்புப் பகுதியில் ஆயுதங்களுடன் வந்ததாகத் தெரிவித்து இரண்டு விடுதலைப் புலிகளை, படையினர் கைதுசெய்துள்ளதாக படைத்தலைமை தெரிவித்தது.

நேற்றுப்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் -

கந்தசாமி கரன் (கீதன் - வயது 24) கிளிவெட்டி மூதூர், கணபதிப்பிள்ளை சுரேந்திரன் (வயது 23) என்ற இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

எம்.டி.90 மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு விடுதலைப் புலிகளும் மாவடிவேம்புப் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தபோது, ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் இவர்களைக் கைதுசெய்ததாகப் படைத்தலைமை தெரிவித்தது.

இவர்கள் இருவரும் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# கண்காணிப்பு குழுவினர் நேற்று பார்வையிட்டனர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தபாலகத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று சென்று பார்வையிட்டனர்.

பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி கடந்த மூன்று தினங்களாக நெடுந்தீவு தபாலகத்தில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர் இது குறித்து நெடுந்தீவு மக்கள் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்திருந்தனர்.

இதனையடுத்தே நேற்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் இராணுவத்தரப்புடனும் பேசிவிட்டே இது குறித்துக் கருத்து தெரிவிக்கமுடியும் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்ததாக அறிய வருகிறது.

## கிரானில்....

இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பிரதே பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புரிந்துணர்வுடன்...

செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறையும் அவ்வாறான சோதனைகளின்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்பதையும் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் தாம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆட்கடத்தல் குற்றம் சுமத்தி கைது செய்த இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதென விசேட அதிரடிப் படைத் தரப்பினர் இணக்கம் தெரிவித்தனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையிலான இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கிறது.

அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் றைமோறஸ்கோ தலைமையில் காலை 10 மணி முதல் 12 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் இச்சந்திப்பு நடைபெற்றது

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையில் ஆறுபேர் கொண்ட குழுவும், படைத்தரப்பில் அம்பாறை மாவட்ட விசேட அதிரடிப்படை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்தரட்ணாயக்க, அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன உட்பட 8 பேரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவி செல்வி சுசான நிங்கோ பெற்றிசன் உட்பட நான்கு பேர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு சார்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகளுக்கு இரு தரப்பினரும் ஒத்துழைப்பது குறித்துப் பேசப்பட்டதாகவும் மீண்டும் ஓர் சந்திப்பு அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின்....

தென்னிலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை, சமாதானம் தொடர்பான நிலையற்ற கொள்கையைக் கொண்டுள்ளமை குறித்து தமிழ்ச்செல்வன் அதிருப்தி வெளியிட்டமை குறித்தும் சிவில் சமூக அமைப்பினர் ஜயந்த தனபாலவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதன் போது ஜயந்த தனபால - நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்ற போதும் ஜனாதிபதி சந்திரிகா தனது நிலைப்பாட்டை நோர்வேத் தரப்புக்கு தெளிவாக விளக்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

## வெளிநாட்டுத்....

கின்றன.

இதேவளை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தை மீண்டும் திறப்பது குறித்து தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தூதரகத்தைத் தற்காலிகமாக மூடியுள்ளதாக வொஷிங்ரனில் வைத்து சர்வதேச ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

இதேவேளை சந்தேகத்துக்குரிய துகள்கள் குறித்து பரிசோதனை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தின் பிரதி இரசாயன பகுப்பாய்வாளரை அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆயினும் இந்தத் துகள்கள் குறித்துபரிசோதனை நடத்துவதற்குரிய வசதிகள் தங்களிடம் இல்லையென பிரதி இரசாயன பகுப்பாய்வாளர் டபிள்யூ. டி.எம்.குணரட்ண தெரிவித்தார்.

# இளைஞனை காணவில்லையென முறைப்பாடு!

வவுனியாவிலிருந்து புறப்பட்டு தமது சொந்த ஊருக்குச் சென்ற இளைஞனைக் காணவில்லையெனத் தெரிவித்து, அவரது உறவினர்கள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின வவுனியா அலுவலகம் மற்றும் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச சங்கம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

கடந்த முதலாம் திகதி வவுனியாவிலிருந்து தனது சொந்த ஊரான முல்லைத்தீவுக்குச் சென்ற விஜயகுமார் (வயது 24) என்பவர் இதுவரை வீடு திரும்பவில்லை.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதிக்கு தனது உறவினரைச் சந்திகக் சென்றபோதே அவர் காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அம்பாறையில் இன்று பூரண துக்கதினம்!

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை - வீரமுனைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 60 தமிழர்களின் 14 ஆவது ஆண்டு நினைவாக இன்று அம்பாறையெங்கும் பூரண துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளில் தங்கியிருந்த பெருமளவு மக்களைப் படையினர் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்திருந்தனர்.

எனவே, இந்த மக்களை நினைவு கூரும் வகையில் இன்றைய நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. வீடுகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்களில் வெளைக் கொடிகளை பறக்கவிடுமாறும் பொது அமைப்புக்கள் கேட்டுள்ளன.

# ஏழு அகதிகள் நாடு திரும்பினர்

தமிழ்நாட்டின் வேலூர் அகதி முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளில் ஏழு பேர் நேற்றுமுன்தினம் தலைமன்னார் திரும்பினர்.

இவ்வாறு வந்த இவர்களை கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் இவர்களை நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை -

இவர்கள் அனைவரையும் சொந்த இடத்துக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எம்.அப்துல்லா உத்தரவிட்டார்.

இவர்கள் அனைவரும் மன்னார் நானாட்டான் மோட்டக்கடையைச் சேர்ந்தவர்களெனவும், நேற்றைய தினமே இவர்கள் அனைவரும் சொந்த இடத்துக்கு அனுப்பப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (201)

# சுகாதார ஊழியர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

அகில இலங்கை சுகாதாரத் துறை ஊழியர் சங்கத்தினர் நேற்று கொழும்பில் - சுகாதாரம மற்றும் போசாக்கு அமைச்சின் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சுகாதார ஊழியர் சங்கத்தின் உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

## அமெரிக்க....

குள்ள நிலைமைகளையும் ஆராய்ந்தனர்.

வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய செயல்முறைகள் தொடர்பாக இவர்கள் ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது.

## தீர்வையற்ற...

கும் அனுமதியளித்திருக்கும்.

ஆனால், இப்போதைய அரசாங்கம் சம்பூருக்கு விடுதலைப் புலிகள் செல்வதைத் தடுத்துள்ளமை திருப்தியளிக்கிறது என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

## கொழும்பு....

இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களில் தாக்குதல்களை நடத்தியதாலேயே இந்தப் புதிய சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை முதல் இந்த சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். பல்கலை வவுனியா வளாக ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து துணைவேந்தருடன் பேச்சு

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக கல்விசாரா ஊழியர்களது பிரச்சினைகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் துணைவேந்தருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், பதில் பதிவாளர் திருமதி சிவநேசன், வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் ஆர்.மகேஸ்வரன் உட்பட வவுனியா வளாக மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது 11 அம்சக் கோரிக்கைகள் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டன.

தமக்குச் சாதகமான தீர்வு வழங்கப்படும் பட்சத்தில் தாம் முதல்வருக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.


# மரண அறிவித்தல்

## மார்க்கு அலெக்சாந்தர் (சாந்தர்)

பருத்தித்துறை வீதி நெல்லியடியைச் சேர்ந்த மார்க்கு அலெக்சாந்தர் (சாந்தர்) 11.08.2004 காலமாகிவிட்டார்.

அன்னாரது நல்லடக்கம் 12.08.2004 வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் கீரிப்பல்லி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அ.ஆனந்தராசா** (ஆனந்தன் கராஜ்)
மகன்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## தேசிய லொத்தர்சபை

திகதி 2004.08.10

**மஹஜன சம்பத** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1638

| வெற்றி எழுத்துடன் | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| W | 6 | 6 | 6 | 8 | 2 | 2 |

## நாணய மாற்றுவீதம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களுக்கான கொள்வனவு மற்றும் விற்பனவு விலைகள்.

| நாணயம் | கொ.விலை (ரூ.ச) | வி.விலை (ரூ.ச) |
|---|---|---|
| அமெரிக்கடொலர் | 103.53 | 104.31 |
| யூரோ | 126.18 | 128.09 |
| ஸ்ரெலிங்பவுன் | 188.88 | 191.21 |
| சுவிஸ் பிராங் | 81.52 | 83.26 |


# நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

**7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.**


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.